ஏலாதி

அம்சவேணி பெரியண்ணன்

ஏலாதி

(மூலமும் - எளிய உரையும்)

அம்சவேணி பெரியண்ணன் M.A.,

வனிதா பதிப்பகம்

11, நானாதெரு, பாண்டி பஜார்
தலைமை அஞ்சலகம் அருகில்
தியாகராய நகர், சென்னை – 600 017.
தொலைபேசி – 044 42070663

◆ ஏலாதி ◆ அம்சவேணி பெரியண்ணன் ◆ பதிப்பு 2022 ◆ 72 பக்கங்கள் ◆ வெளியீடு: வனிதா பதிப்பகம், 11, நானா தெரு, பாண்டி பஜார், தி.நகர், சென்னை - 600 017, போன்: 044 - 42070663 ◆ ஒளிஅச்சு: செல்லம் கிராபிக்ஸ், சென்னை-94 ◆ அச்சிட்டோர்: அம்சா ஆப்செட், சென்னை.

விலை ரூ.70/-

பதிப்பாளர்: பதிப்பகத் திலகம் **பெ.மயிலவேலன்,**
M.Sc., M.Ed., M.Phil., Ph.D.

◆ YELATHI ◆ HAMSAVENI PERIANNAN ◆ Edition 2022 ◆ 72 Pages ◆ Published by: Vanitha Pathippagam, No.11, Nana Street, Pondy Bazzar, T.Nagar, Chennai - 600 017, Ph: 044 - 42070663 ◆ Typeset: Chellam Graphics, Chennai - 600 094. ◆ Printed at: Hamsa Offset, Chennai.

Price : Rs.70/-

PUBLISHER: Pathippaga Thilagam **Dr. P.MAILAVELAN,**
M.Sc., M.Ed., M.Phil., Ph.D.

பதிப்புரை

இரண்டு அடிகள் முதல் எட்டு அடிகள் வரை பாடப் பெற்றவை கீழ்க்கணக்கு நூல்களாகும்.

கீழ்க்கணக்கு நூல்கள் அனைத்துமே வெண்பாக்கள். குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா; நேரிசை வெண்பா; இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா ஆகிய வெண்பாக்களால் யாக்கப் பெற்றவை.

"நாலடி நான்மணி நால்நாற்ப தைந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைசொல் காஞ்சியோ டேலாதி என்பவே
கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு."

கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டு

1. நாலடியார், 2. நான்மணிக்கடிகை, 3. இன்னா நாற்பது, 4. இனியவை நாற்பது, 5. கார்நாற்பது, 6. களவழி நாற்பது, 7. அய்ந்திணை அய்ம்பது, 8. அந்திணை எழுபது, 9. திணைமொழி அய்ம்பது, 10. திணைமாலை நூற்றைம்பது, 11. கைந்நிலை (இன்னிலை), 12. திருக்குறள், 13. திரிகடுகம், 14. ஆசாரக்கோவை, 15. பழமொழி நானூறு, 16. சிறுபஞ்சமூலம், 17. முதுமொழிக் காஞ்சி, 18. ஏலாதி ஆகியவை.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள். இதில் திருக்குறள் முதல் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். திருக்குறளுக்கு முப்பால் என்ற பெயர்தான் அப்பொழுது வழங்கப் பெற்றன.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஏலாதி என்னும் நூல் மிகவும் எளிமையாகவும், இனிமையாகவும் அம்சவேணி பெரியண்ணன் அவர்கள் உரை எழுதி யுள்ளார். இவர் தமிழகத்தின் முதல் பெண் பதிப்பாளராக 3000க்கும் மேற்பட்ட நூல்களை பதிப்பித்துள்ளார்.

இந்நூல் கடல் நீரை வடிக்கட்டி குவளையில் கொடுக்கப் பெற்றுள்ளது. கரும்பைக் கசக்கிப் பிழிந்து வெல்லக் கட்டியாக்கித் தரப்பெற்றுள்ளது. சுவைப்பீர்! பயன் பெறுவீர்!!

❑ ❑ ❑

ஏலாதி

சிறப்புப் பாயிரம்

இல்லற நூல் ஏற்றதுறவற நூல்ஏயுங்கால்
சொல்அறநூல் சோர்வின்றித் தொக்குஉரைத்து-நல்ல
அணிமேதையாய் நல்லவீட்டு நெறியும்
கணிமேதை செய்தான் கலந்து.

விளக்கவுரை

கணிமேதையார் இல்லற ஒழுக்கம், ஏற்கும் துறவறம், ஏற்ற இடங்களில் பேரின்ப வீட்டின் நெறி பற்றி ஆய்ந்து ஏலாதி என்ற நல்ல அறநூலை ஆக்கித் தந்துள்ளான் என்பதை அறிவுடையவரே அறிக.

இல்லறத்தை விட்டு துறவு மேற்கொள்வோர் கைக்கொள்ள வேண்டிய வழிமுறைகளைக் கூறும் நூலோடு ஏற்ற இடங்களில் மேலான வீட்டின்ப நெறியும் கலந்து தொகுத்துரைக்கும் விதமாக கணிதமேதையார் செய்தார் ஒரு நூல். அதுவே ஏலாதி.

அருஞ்சொற்பொருள்

ஏயுங்கால்-ஏற்ற இடங்களில். சோர்வின்றி-குற்றம், குறை. தொக்கு-தொகுத்து. அணி-அழகு. மேதையாய்-மேதைமை, அறிவுடையவனே.

தனிசிறப்புப் பாயிரம்

அறுநால்வராய் புகழ்ச்சேவடி ஆற்றப்
பெறுநால்வர் பேணிவழங்கிப்-பெறுநால்
மறைபுரிந்து வாழுமேல் மண்ஒழிந்து விண்ணோர்க்கு
இறை புரிந்து வாழ்தல் இயல்பு.

விளக்கவுரை

அறுநால்வர் ஆணைப்படி பணிசெய்து நால்வரைப் புகழ்ந்து நான்கு வேதங்களைப் புரிந்து வாழ்ந்தால் விண்ணவர்க்கும் தலைவன் ஆகலாம் என்பது பொருள். அறுநால்வர் என்பவர்கள்... ஐம்பெருங்குழு என்னும் ஐவர். அமைச்சர், ஆசான், படைத் தலைவர், தூதர், ஒற்றர் என்போராகும். கரணத்தியல் வரி, கருமாதிக்காரர், கனகச் சுற்றம், கடைக்காப்பாளர், நகர மாந்தர், சேனைத் தலைவர், யானை வீரர், குதிரை வீரர், ஐவகைச் சுற்றம்-பழைய பாராட்டுவோர், அன்புடயவர், வெறுப்பில்லா தவர், கொடுத்து உதவுபவர், இன்சொல் உடையவர், என்னும் ஐவர். மற்றும் படை வரிசை, குடிமக்கள், செல்வவளம், நல்அமைச்சர், நண்பர், பாதுகாப்பு என்னும் ஆறங்கம் சேர-25. ஆறுமூறுநான்கு இருபத்து நான்கு (5 + 8 + 5 + 6)

அ.பொ.

பேணி–பாதுகாத்து. வழங்கி–உதவி செய்து. நான்மறை–நான்கு வேதம். புரிந்து–வேதப் பொருளைப் புரிந்து. வாழுமேல்–வாழ்ந்தால். இறைபுரிந்து–தலைமைப் பொறுப்பேற்று.

1. நூல்

சென்றபுகழ் செல்வம் மீக்கூற்றம் சேவகம்
நின்றநிலை கல்வி வள்ளண்மை-என்றும்
வழிவந்தார் பூங்கோதாய் ஆறும் மறையின்
வழிவந்தார் கண்ணே வனப்பு.

விளக்கவுரை

பூங்கோதாய்! செற்ற புகழ் செல்வம், மீக்கூற்றம், சேவகம் நின்ற நிலை, கல்வி, வள்ளண்மை என்னும் ஆறும் மறையின் வழிவந்தார் கண்ணே எப்போதும் அழகானது என்பது பாடலின் பொருளாகும். எக்காலத் திலும் கொண்டாடப்படும் புகழ், தன்நிலையில் தாழாமை, கொடை முதலானவை அழியா அழகு என்று ஏலாதி கூறுகிறது. அறநூலாகிய வேத நூல்படி வாழ்க்கை நடத்துபவர்க்கு மேலே கூறப்பட்டவை அழியா அழகு என்பதாகும். வேதநூல்கள் என்ன சொல்கின்றன?

ஒருவருக்கும் தீமை செய்யாதே. ஏனெனில் நீவேறு-மற்றவர்கள் வேறுஅல்ல. எல்லோரிடமும் இறைஒளி யாகிய ஆத்மா இருக்கிறது. அதனால்தான் பிறருக்கு செய்யும் நன்மை, தீமை திரும்பவும் உங்களிடமே வருகிறது. ஆகவே, இதை அறிந்து மற்ற புகழோடு வாழ்ந்தால் உங்கள் புகழ் எக்காலத்திலும் அழியாது எழிலை கொடுக்கும் என்று இதற்குப் பொருளாகும்.

அ.பொ.

சென்றபுகழ்–எல்லோரும் எக்காலத்தும போற்றிக் கொண்டாடும் புகழ். திரண்ட செல்வம், செல்வாக்கு (மீக்கூற்றம்). நின்ற நிலையில் தாழாத பேராண்மை. (சேவகம் நின்றநிலை). கல்வி அறிவு, கொாடைக்குணம் (வள்ளண்மை). என்னுள்ள ஆறும், நிறைந்த, மலர் அணிந்த கூந்தலுடைய பெண்ணே! அறநூல் கூறும் வழிநடப்போக்கு, என்றும் அழியா வனப்புடைய ஆபரணங்களாம். மறை–அறநூல். வனப்பு–அழகு.

2

கொலைபுரியான் கொல்லான்புலால் மயங்கான்கூர்த்த
அலைபுரியான் வஞ்சியான் யாதும்-நிலைதிரியான்
மண்ணவர்கும் அன்றி மதுமலி பூங்கோதாய்
விண்ணவர்க்கும் மேலாய் விடும்.

விளக்கவுரை

கொலை செய்யாதிருத்தல், கள் உண்ணாதிருத்தல், பிறருக்கு துன்பம் செய்யாதிருத்தல், வஞ்சகம் செய்யாமல் இருத்தல், தன்னிலை தாழாது பெருமிதத்துடன் இருத்தல் ஆகிய நான்கு குணங்களும் விண்ணுலகத்தவரைவிட மேலான நிலையைக் கொடுக்கும் என்பது இப்பாடலின் பொருளாகும். மேலே கூறப்பட்ட குற்றங்கள்தான் நம்மை மனிதரிலும் கீழான நிலையில் வைத்திருக்கின்றன. நாம் உண்மையில் தெய்வீகம் நிறைந்தவர்கள். நம்மை எவரும் அச்சுறுத்த இயலாது. ஆனாலும் நாம் அச்சம் அடைகிறோம். நமக்கு மரணம் கிடையாது. ஆனால், நாம் மரண பயம் கொண்டு புலப்புகிறோம். காரணம் என்ன? நம் தெய்வீக ஒளியை மேலே கூறப்பட்ட கொலை, வஞ்சகம் முதலானவை மறைக்கின்றன. இந்த மறைக்கும் திரைகளை விலக்கினால் தேவர்களிலும் மேலான தெய்வ அந்தஸ்தைப் பெறுவோம் என்று ஏலாதி கூறுவது இந்த அர்த்தத்தில்தான்.

அ.பொ.

கொல்லாமை–கொலைத் தொழில் புரியாமை. புரிதல்–விரும்புதல். புலால்–இறைச்சி. மயங்குதல்–விருப்பம் கொள்ளுதல். அலை–வருந்தச் செய்தல். வஞ்சித்தல்–கெடுத்தல். மது–தேன். மலி–மிகுந்த. கோதாய்–கூந்தலுடையவளே.

3. எளியது...! அரியது...!

தவம் எளிது தானம் அரிது தக்கார்க்கேல்
அவம் அரிது ஆதல் எளிதால்–அவம்இலா
இன்பம் பிறழின் இயைவு எளிதுமற்றுஅதன்
துன்பம் துடைத்தல் அரிது.

விளக்கவுரை

புலன்களை அடக்கி தவம் செய்வது எளியது. ஆனால், சேர்த்த பொருளை பிறருக்கு கொடுத்து உதவுவது அரிது.

நற்குண, நற்செயல்கள் என்னும் அந்தஸ்து உடைய சான்றோர்களுக்கு குற்றச் செயல்களை செய்வது அரிது. அது இயலாத ஒன்று. ஆனால், அவர்கள் நல்வழியில் செல்வது எளிது. வீடு பேறு கிட்ட வில்லை யென்றால் பிறவிகள் தொடர்வது எளிது. ஆனால், அப்பிறவித் துன்பத்தை நீக்குதல் அரிது என்று ஏலாதி கூறுகிறது. நல்லவர்களால் நன்மைகளை எளிதாகச் செய்ய முடியும். தீமைகளைச் செய்ய அவர்களால் முடியாது. தவம் செய்வது தவசீலர்களுக்கு எளிது. ஆனால், சேர்த்து வைத்த செல்வத்தை பிறருக்கு கொடுப்பது அரிது. என்றெல்லாம் கூறியிருப்பது எதன் பொருட்டு என்பதை சிந்திக்க வேண்டும். தீயவனுக்கு தீயசெயல்கள் செய்வது தான் எளிது. நல்லவர்களுக்கு நல்ல செயல்களை செய்வதே எளிதானது. ஆனால் நல்ல செயல்கள்தான் வாழ்கிறோம் என்பதற்கு அர்த்தம் கொடுக்கிறது. தீய செயல்கள் துன்பத்தையும் இகழ்ச்சியையும் கொடுக்கிறது. இம்மண் ணுலகத்தில் நாம் வந்திருப்பது எதற்காக? தவம், கொடை முதலான நல்ல செயல்களை செய்து பழைய வினைகளை சாம்பலாக்குவதற்குதான். வினைகள் சாம்பலாகி விட் டால் நாமே தெய்வ வடிவு என்ற தெளிவு வந்து விடும். அதுவே மரணத்தை வெற்றி கொண்ட முக்தி நிலை. இச் சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

அவம்–குற்றம். பிறழின்–தவறினால். இயவு–பெறுதல். துடைத்தல்–போக்கிக் கொள்ளுதல். அரிது–முடியாத ஒன்று.

4. இதுவே போதும்

இடர்தீர்த்தல் எள்ளாமை கீழினம் சேராமை
படர்தீர்த்தல் யார்க்கும் பழிப்பின்-நடைதீர்த்தல்
கண்டவர் காமுறும் சொல் காணின் கல்வியின் கண்
விண்டவர் நூல் வேண்டாவிடும்.

விளக்கவுரை

பிறருக்கு வந்த துன்பத்தை நீக்குதல், பிறரை எள்ளி நகையாடி இகழாமல் இருத்தல். தீயவர்களுடன் சேராமல் இருத்தல். பசியால் வருந்துபவர்களுக்கு உதவி செய்தல். பழிக்கு காரணமான ஒழுக்கக்கேடான செயல்களை நீக்குதல். இனிமையாகப் பேசுதல் ஆகிய ஆறு பண்புகள் அமையப் பெற்றால் போதும். பெரியோர் அறிவுரை, அறநூல் கருத்துகள் ஆகியவை தேவையில்லாமல் போகும் என்று ஏலாதி கூறுகிறது.

சாத்வீக குணங்களை மேலே கூறப்பட்ட குணங்கள் தான் நம் பிறவிப் பிணியை அறுக்கிறது. தெய்வத்திற்கு அருகில் செல்ல வைக்கிறது. நமக்குள்ளே ஒளிரும் ஆத்ம ஒளியை காட்டுகிறது. ஆத்ம ஒளியால் முடியாத காரியம் எதுவும் இல்லை. அதை மறந்தவர்கள்தான் பண்பில்லாத மிருகங்களைப் போல் செயல்படுகிறார்கள். மேலே கூறப்பட்ட நற்குணங்கள் இருந்தாலே போதும். நீதி நூல்கள் கற்கத் தேவையில்லை. பெரியோர்களின் அறிவுரைகளையும் வாசிக்க வேண்டியதில்லை. அந்த நற்குணங்களே லட்சியத்தை நோக்கி (முக்தியை நோக்கி) அழைத்துச் செல்லும் என்பது பொருளாகும்.

அ.பொ.

எள்ளாமை–இகழாமை. படா–பசித் துன்பம். காமறும்– விரும்பும். காணின்–அசையப் பெற்றால். கல்வி–இன்பம். விண்டவர்–விட்டவர்.

5. தானே வரும்

தனக்கென்றும் ஓர்பாங்கன் பொய்யான் மெய் ஆக்கும்
எனக்கென்று இயையான் யாதொன்றும்–புனக்கொன்றை
போலும் இழையார் சொல்தேறான் களியானேல்
சாலும் பிறநூலின் சார்ப.

விளக்கவுரை

தன் பொருட்டாகவோ, தனக்கு வேண்டியவர் பொருட்டாகவோ, பொய் பேசக் கூடாது. உண்மையே பேசவேண்டும். முல்லை நிலத்தில் கரம் சரமாய் பூக்கும் கொன்றைப் பூக்கள் போல அணிகலன்கள் பூண்டிருக்கும் ஆசைப்பட்டு அவர் பேச்சை கேட்டு நடக்கக் கூடாது. ஆணவம் கூடாது. இப்படி இருந்தால் அறிவு நூல்கள் கூறும் எல்லா குணங்களும் தாமே வந்து சேரும் என்று ஏலாதி கூறுகிறது.

தூய்மைதான் சிங்கத்திற்கு நிகரான வலிமையைத் தருகிறது. பொய்யும், புரட்டும், பெண் மயக்கமும் தான் மனிதனை பலவீனமாக்குகிறது. நம்முடைய சொந்த இயல்பு தெய்வத் தன்மை. ஆனால், அதை மறந்து விட்டோம். நாம் பலவீனர்கள் என்று நினைத்துக் கொண்டு பலவீனர்களாகவே ஆகிக் கொண்டிருக்கிறோம். ஆகவே, பொய் பேசாமல், பெண் மயக்கம் கொள்ளாமல் வலிமை பெறுங்கள். ஆத்மாதான் உங்கள் சொந்த ஸ்வரூபம். அதற்கு மரணமோ... துக்கமோ இல்லை என்பதை அறியுங்கள். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

பாங்கன்-சார்ந்தவன். இயைதல்-விரும்புதல். புனம்-முல்லை நிலம். இழை-பொன் ஆபரணங்கள். களி-செருக்கு. சாப்ப-சார்ந்திட வேண்டியவை. சாலும்-வந்து சேரும்.

6. தாய் போன்றவன்

நிறை உடைமை நீர்மை உடைமை கொடையே
பொறை உடைமை பொய்மை புலால்கண்-மறைஉடைமை
வேணஅன்ன தோளாய் இவைஉடையான் பலஉயிர்க்கும்
தாய்அன்னன் என்னத் தகும்.

விளக்கவுரை

நடுவுநிலைமை தவறாதிருத்தல். நற்குணம் அடையப் பெற்றிருத்தல். கொடைக் குணம், பொறுமை, பொய் பேசாமை, புலால் மறுத்தல் என்னும் நற்குணங்களைக் கொண்டிருக்கும் ஒருவன் உலகத்து உயிர்களுக்கெல்லாம் தாயெனப் போற்றத்தகும் தகுதியுடையவன் ஆவான் என்று இப்பாடல் கூறுகிறது.

மூங்கில் போன்ற தோள்களையுடைய பெண்ணைப் பார்த்து கூறுவதுபோல் ஆசிரியர் கணிமேதையார் இப்பாடலை தந்துள்ளார்.

ஒருபக்கம் சாயாமல் நடுவுநிலைமையில் இருப்பவர் கடவுளே. மனிதன் அக்குணத்தைப் பெற்றுவிட்டால் மற்றவர்களால் தாய் என்று போற்றப்படுவான். அதே சமயம் தீயவர்களின் எதிர்ப்புகளையும் சந்திக்க நேரும். உண்மைக்காக இவற்றை துணிச்சலுடன் சகிப்புத்தன்மை கொண்டு எதிர்கொள்பவர்கள் தாய்க்கு நிகரானவர்கள் என்பது பொருளாகும்.

அ.பொ.

நீர்மை-கல்வி கேள்விகளால் நல்லறிவு பெற்றிருத்தல். கொடை-இல்லாதவர்களுக்கு கொடுத்தல். வேய்-மூங்கில். தோளாய்-தோள்களை உடையவளே.

7. இவனை விண்ணவர் எதிர்ப்பார்ப்பார்கள்

இன்சொல் அளாவல் இடம் இனிது ஊண்யாவர்க்கும்
வன்சொல் களைந்து வகுப்பானேல்-மென்சொல்
முருந்தேய்க்கும் முட்போல் எயிற்றினாய் நாளும்
விருந்தேற்பர் விண்ணோர் விரைந்து.

விளக்கவுரை

விருந்தாளியாய் வருபவர்களிடம் இன்முகம் காட்டி வரவேற்பது அன்புடன் பேசுவது, இருக்க இடம் தருவது,

உண்ண நல்உணவு அளிப்பது, கொடிய சொற்களை கூறா திருப்பது. மெய்மையான சொற்களைக் கூறுதல், ஆகிய பண்புகளை கொண்டவனை விண்ணகத்து தேவர்கள் விருந்தினராய் ஏற்று போற்றுவார்கள். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

விருந்தினரை அன்போடு உபசரிப்பவர்கள் வீட்டில் மகாலட்சுமி வாசம் செய்வாள். பழை வினைகள் அழியும். புகழும் செல்வாக்கும் ஓங்கும். வாளவர்களால் வரவேற் கும் சிறப்பையும் பெறுவர் என்பது பொருளாகும்.

அ.பொ.

முருந்து-மயிலிறகின் அடிப்பாகம். ஏய்க்கும்-பழிக்கும். எயிறு-பல்.

8. நண்பரும் நல்லவர் ஆவார்

உடன்படான் கொல்லான் உடன்றோர் நோய்தீர்த்து
மடம்படான் மாண்டார் நூல்மாண்ட-இடம்பட
நோக்கும் வாய்நோக்கி நுழைவானேல் மற்றவனை
யாக்கும்அவர் யாக்கும் அணைந்து.

விளக்கவுரை

ஒரு உயிரை கொல்ல சம்மதிக்க மாட்டான். தானும் கொல்ல மாட்டான். நோயுற்றவர்களுக்கு உதவுபவன், அறியாமை வசப்படாதவன். பெரியோர் இயற்றிய அறிவு நூல்களை கற்று அதன்படி நடப்பவன் ஆகிய நற்குணங்கள் கொண்டவனை நண்பனாக்கிக் கொள்பவன் தானும் அந்த குணங்களைப் பெறுவார்கள் என்று இப்பாடல் கூறுகிறது.

சத்சங்க சேர்க்கை என்பது எவ்வளவு தீய மனிதனை யும் நல்லவனாக்கி விடும். குடிகாரனிடம் நல்லவன் சதா பழக்கம் வந்து கொண்டால் அவனும் குடிகாரனாகி விடுவான். சூதாடுபவனுடன் ஒருவன் பழக்கம் வைத்தால்

அவனும் சூதாடி ஆவான். மகான் ஒருவரிடம் சகவாசம் வைத்தால் அவனும் ஒரு கட்டத்தில் மகான் ஆவான். ஆகவே, மேலே குறிப்பிட்ட நற்குணங்களை கொண்ட வனை ஒருவன் நண்பனாக்கிக் கொண்டால் தானும் அந்த நல்ல குணங்களைப் பெறுவான் என்று பொருளாகும்.

அ.பொ.

உடன்படான்-ஒரு உயிரைக் கொல்ல ஒப்பமாட்டான். நோய் தீர்த்து-நோய்வாய்பட்டு வருந்துகிறவர்கள் துன்பத்தைப் போக்கி. மடம்-அறியாமை.

9. செயற்கரிய செயல்கள் இவை

கற்றாரைக் கற்றது உணரார் எனமதியார்
உற்றார் அன்னணம் ஓராமல்-அற்றார்கட்கு
உண்டி உறையுள் உடுக்கை இவைஈந்தார்
பண்டிதராய் வாழ்வார் பயின்று.

விளக்கவுரை

கல்வி கேள்விகளில் மேம்பட்டவர்களை இகழாமல் இருப்பவனம், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரை தாழ்வாக நினையாதவனும், ஆதரவற்ற ஏழை எளியவர் களுக்கு உண்ண உணவு, உடுக்க உடை இருக்க இடம் ஆகியவற்றை கொடுத்து உதவுபவர்களும் கற்றறிந்த சான்றோர்கள் மதிக்கப்படும் மேதைகளாய் வாழ்வில் சிறந்தோங்கி இருப்பவர்கள் என்று ஏலாதி கூறுகிறது.

ஏழை, எளியவர்கள் நோயாளிகள் ஆகியோர் வடிவில் இறைவனே நிற்கிறான் என்பதை நாம் தெளிவாக அடிக்கடி நினைவில் கொள்ள வேண்டும். நம்மிடம் இருந்து உதவி பெறுபவர்கள் தாழ்ந்தவர்கள். நாம் உயர்ந்தவர்கள் என்ற எண்ணம் கூடாது.

பெறுவதற்கு எவரும் இல்லாவிட்டால் புண்ணிய பலன் எப்படி நமக்கு கிடைக்கும்? அதனால்தான்

இறைவனே எளியவர்களாக... பலவீனர்களாக நம்முன் வருகிறான். அவர்களுக்கு உதவி செய்து கற்றவர்கள் மதிக்கும் மேதைகளாய், தனக்குள்ளே இருக்கும் இடைற ஒளியை தரிசிக்கும் யோகிகளாய் நாம் மாறவேண்டும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

உற்றார்–உறவினர், நண்பர். அன்னணம்–அப்படியே. ஓராமல்–உயர்வு தாழ்வு பார்க்காமல். அற்றார்–இல்லாதவர். உண்டி–உணவு. உறையுள்–இருக்கும் இடம். உடுக்கை–உடை. பண்டிதர்–மேதை.

10. புரியாத புதிர்

செங்கோலன் கீழ்க்குடிமக்கள் செல்வமும் சீர்இலா
வெங்கோலன் கீழ்க்குடிகள் வீந்துகவும்–வெம்கோல்
அமைச்சர் தொழிலும் அறியலம் ஒன்றுஆற்ற
எனைத்தும் அறியாமை யால்.

விளக்கவுரை

மக்கள் நலனே குறிக்கோளாய் முறையாக ஆட்சி நடத்தும் அரசனின் நாட்டில் அவன்கீழ் வாழும் குடிமக்களும், அவர்களின் செல்வமும், முறையின்றி கொடுங்கோல் ஆட்சி செய்யும் அரசன் கீழ் வாழும் குடிமக்களும், இதற்கு காரணமான இப்படி கொடுங்கோலாட்சிக்கு துணையாக நின்று உதவும் (செங்கோல், கொடுங்கோல் இரண்டிற்கும் காரணமான) அமைச்சர்களும் அழிகின்றனர். இதற்கு என்ன காரணம் என்பது தான் ஒரு சிறிதும் புரியவில்லை என்று ஏலாதி கூறுகிறது.

அதாவது, நல்லவனும் அழிகிறான். கெட்டவனும் அழிகிறான் இதற்கு காரணம் புரியவில்லை என்று ஆசிரியர் கூறுகிறார். இதுவே இறைவன் நடத்தும்

விளையாட்டு ஒரு பரம்பொருளே பல கோடி வடிவங்களாக மண்ணுலகில் இயங்குகிறது. நல்லவன், தீயவன், செங்கோல் ஆட்சி செய்பவன், கொடுங்கோல் ஆட்சி செய்பவன், திருடன், மருத்துவன், நோயாளி என்று கோடிக்கணக்கான வடிவம் எடுத்து இயங்குபவன் இறைவனே. இந்த எல்லா வடிவங்களிலும் இறைவன் ஒளியாக உறைகிறான். உடலே அழிகிறது. ஆத்மா அழிவதில்லை. இதுதான் ஏலாதி கேட்கும் வினாவுக்கு விடையாகும்.

அ.பொ.

சீர்இலா–முறையில்லா. வீந்த–விழுந்து. உகுதல்–அழிதல். ஒன்று–காரணத்தை. ஆற்ற–முழுவதும்.

11. உயர்வடைய...

அவா அறுக்கல் உற்றான் தளரான் அவ்ஐந்தின்
அவா அறுப்பின் ஆற்றஅமையும்-அவா அறான்
ஆகும் அவன் ஆயின் ஐங்களிற்றின் ஆட்டுண்டு
போகும் புழைஉள் புலந்து.

விளக்கவுரை

பேராசையை ஒழிக்க நினைத்தவன், உள்ள உறுதி தளராதவன், ஐம்பொறிகள் வழி செல்லும் இச்சைகளை முற்றும் நீக்கியவன் எல்லா நற்குணங்களுக்கும் மேம்பட்டவனாக ஆவான். அவ்வாறு இல்லாமல் ஐம்புலன்கள் வழிசென்று அடிமையாக இருப்பவன் ஐம்பொறிகளாகிய யானையின் துதிக்கையால் அடிபட்டு விருந்தி நரகப் படுகுழியில் விழுந்து கொடிய துன்பங்களை அழிக்க நேரும் என்று ஏலாதி கூறுகிறது.

ஐம்புலன்களை அடக்கியவன் மனது ஒளி பெறுகிறது. அந்த ஒளி சிங்கத்தின் வலிமையை மனதிற்கு தருகிறது. அந்த வலிமையை நமக்குள் இருக்கும் ஆத்ம ஒளியை

காண பயன்படுத்தும்போது நமக்கு சித்தி உண்டாகும். அதன் காரணமாக பரிபூரணமாக அச்சத்திலிருந்து விடுபடுகிறோம். அந்த சிங்க நிகர் வலிமையை பொருள் ஈட்டவும், பதவி... பட்டங்களைப் பெறவும் உபயோகப் படுத்துபவர்களும் மிகப் பெரிய வெபற்றியை பெறு வார்கள். ஆனால், நிலையானது ஆத்ம தரிசனமே. செல்வம்... பட்டம்... பதவி போன்றவை நிலையற்றவை. இதனை கவனத்தில் கொள்ளவேண்டும். இச்சிந்தனை களைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

அவா–ஆசை. ஐம்பொறி–மெய், வாய், கண், மூக்கு, செவி.

12. செல்லத்தகாத இடங்கள்

கொலைக்களம் வார்க்குத்தும் சூதாடும் எல்லை
அலைக்களம் போர்யானை யாக்கு-நிலைக்களம்
முச்சாரிகை ஒதுங்கும் ஓர்இடத்தும்-இன்மை
நச்சாமை நோக்காமை நன்று.

விளக்கவுரை

கொலை செய்யும் இடம், குத்துச் சண்டை போடு கின்ற பயிற்சி எடுக்கின்ற இடம், சூதாட்டம் நடை பெறும் இடம், துன்புறுத்தும் சிறைச்சாலை, யானை களை பழக்கும் இடம், யானை, குதிரை, தேர் மூன்றும் ஓடிப் பழகுகின்ற இடம் இங்கெல்லாம் சென்று பார்க் காமல் இருப்பது நல்லது என்று ஏலாதி கூறுகிறது.

மேலே சொல்லப்பட்ட இடங்கள் அனைத்தும் ஆபத்தான இடங்கள். அச்சம் தருபவை காண்பதற்கு எத்தனையோ காட்சிகள் இருக்கின்றன. அவைகளை காணவேண்டுமே ஒளிய ஆபத்தான காட்சிகளை காண விரும்பக்கூடாது. மனம் எந்த அளவுக்கு சுதந்திரமாகவும், அமைதியாக இருக்கிறதோ அந்த அளவுக்கு அது

தெளிவான முடிவுகளை எடுக்கிறது. தெளிவான வழிகளும் உதயமாகின்றன. மனதை அலைபாய விடுவோர். தேவையில்லாத காட்சிகளைக் கண்டு மனத்தை அச்சத்தின் பிடியில் சிக்க வைப்போர் எந்த காரியத்தையும் உருப்படியாக செய்ய முடியாது. அலைபாயும் மனம் பலவீனமானது என்பன. மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

வார்க்குத்து-மற்போர். அலைக்களம்-வருந்தும். இடம்-சிறை. யாக்கும்-பழக்கும். முச்சாரிகை-மூன்று வகை. நச்சாமை-காண ஆசைப்படாதிருத்தல்.

13. ஏற்கத்தக்க குணங்கள்

விளையாமை உண்ணாமை ஆடாமை ஆற்ற
உளையாமை உட்கு உடைத்தா வென்று-களையாமை
நூற்பட்டார் பூங்கோதாய் நோக்கின் இவைஆறும்
பாற்பட்டார் கொண்டொழுகும் பண்பு.

விளக்கவுரை

நூலால் கட்டப்பட்டு எழிலுடன் விளங்கும் பூச்சூடிய கூந்தலை யுடையவளே... பிறருக்கு துன்பம் செய்யாமல் இருப்பதும், ஐம்புலன்கள் வழிசென்று இச்சைகளை நுகராமையும், பயனற்ற சொற்களை பேசாமல் இருப்பதும், பிறரால் வரும் கேடுகளுக்கு வருந்தாமையும் வெட்கக்கேடான செயல்களைச் செய்யாமை ஆகிய குணங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டிய நற்குணங்கள் என்று ஏலாதி கூறுகிறது.

பிறருக்கு துன்பம் செய்யாமை, ஐம்புலன்களின் வழி செல்லாமை ஆகியவை திரும்ப, திரும்ப ஏலாதியில் கூறப் படுகிறது. பிறருக்கு தீமை செய்யாமல் இருந்து பாவ

முட்டை சாம்பலாகிறது. தன்னைத்தானே அடக்கி ஆசைகளை வியக்கி மனதை தூய்மைப்படுத்தினால் உள்ளே இருக்கும் தெய்வ ஒளிகாட்சி தருகிறது. பேரானந்தம் (நிலையான) வருகிறது. இதனை உணர்த்தும்.

அ.பொ.

உளையாமை–வருந்தாமை. உட்குதல்–அஞ்சுதல். உடைத்தல் –வெல்லுதல்.

15. இவை நன்று

கண்போல்வார்க் காயாமை கற்றார் இனம்சேர்தல்
பண்போல் கிளவியார் பற்றாமை–பண்போலும்
சொல்லார்க்கு அருமறை சோராமை சிறிதெனினும்
இல்லார்க்கு இடர்தீர்த்தல் நன்று.

விளக்கவுரை

கண்ணைப் போன்ற நல்ல நண்பர், உறவனிர் தவறு செய்து விட்டாலும் அவர் மீது கோபம் கொள்ளாமை, அதற்காக அவரை வெறுத்தொதுக்காமை, கற்றறிந்த பெரியோர்கள் கூட்டத்தில் சேர்ந்திருத்தல். இன்னிசை போல் இனிக்கப் பேசி மயக்கும் பெண்கள் பின் செல்லாதிருத்தல், இனிக்கப் பேசும் பெண்களிடம் அரிய ரகசிய உள்ள மகனை சொல்லாதிருத்தல், அளவில் சிறிது என்றாலும், ஏதும் இல்லாதவர்களுக்கு இயன்றதை கொடுத்து உதவி செய்வது நல்லது என்று இப்பாடல் கூறுகிறது.

மயக்கும் பெண்களிடம் சிக்கிய மனிதர்கள் அழிவை நோக்கி செல்கிறார்கள். பெண்ணாசையால் அரசை இழந்தவர்கள், புகழை இழந்தவர்கள், உயிரை இழந்தவர்கள் ஆகியவர்களை வரலாறு மற்றும் புராணங்களில் காண்கிறோம். ஒழுக்கமே உயர்வு. ஒழுக்க கேடு அழிவு தான். ஒழுக்கமாக வாழ்பவனுக்கு ஆயிரக்கணக்கான தேவதைகள் சூழ்ந்து பாதுகாப்பு கொடுக்கும். கண்களுக்

குத் தெரியாத அந்த தேவதைகள் சூழ்ந்திருப்பதால்தான் நல்லவர்கள் வெற்றி பெறுகிறார்கள். பல சோதனைகளி லிருந்து மீணுகிறார்கள். இதை நினைவில் கொள்ள வேண்டும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

துடைத்தல்–இடர் தீர்த்தல். கண்போல்வார்–கண்களைப் போல் அரிய நண்பர்கள் உறவினர்.

16. இனியவை இவை

துறந்தார் கண்துன்னி துறவார்க்கு இடுதல்
இறந்தார்க்கு இனிய இசைத்தல்-இறந்தார்
மறுதலை சுற்றம் மதித்து ஓம்புவானேல்
இறுதல்இல் வாழ்வே இனிது.

விளக்கவுரை

பந்த பாசங்களை விட்டொழித்த துறவிகள் நிலையில் இருந்து பற்றுக்களை விடாதவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். ஆசைகளைத் துறந்த பெரியோர்களைப் பணிந்து இனிய மொழிகளை கூறவேண்டும். துணை இழந்தவர், பகைவர், உறவினர் ஆகியோரை பெருந் தன்மையுடன் காத்துவரவேண்டும். இப்படியெல்லாம் செய்தால் இல்லற வாழ்வே இனியது. முக்திகூட அதற்கு அடுத்தது என்று சொல்லாம் என்ற பொருளில் இப் பாடல் அமைந்துள்ளது.

மற்றவர்களுக்கு உதவி செய்தால் நம் உடலே அழிந்தே போனாலும் கவலையில்லை. அப்படிப்பட்ட சுயநலமில்லாமை மட்டும் ஒருவனுக்கு இருந்து விட்டால் அவளே தெய்வமாகி விடுவான். எல்லா சக்தியும், வலிமையும் அவனுக்கு சேரும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

துன்னி–பொருந்தி. இறந்தார்–கடந்தவர். இனிய இசைத்தல்–அன்பான மொழிகளைப் பேசுதல். மறுதலை–மாறுபடும் பகைவர். ஓம்புதல்–காத்தல். இறுதல்–கெடுதல். இல்–இல்லாத. வாழ்வு–இல்லறம். ஏ–அசை.

17. இதுவே அமைச்சர்க்கு அழகு

குடிஓம்பல் வன்கண்மை நூல்வன்மை கூடம்
மடிஓம்பும் ஆற்றல் உடைமை–முடிஓம்பி
நாற்றம் சுவைகேள்வி நல்லார் இனம்சேர்தல்
தேற்றானேல் தேறும் அமைச்சு.

விளக்கவுரை

குடிமக்களுக்கு நன்மை செய்து பாதுகாக்க வேண்டும். வீரம்... கற்றறிந்த புலமை வேண்டும். வஞ்சனை, சோம்பல் ஆகிய தீய குணங்களை விலக்கி தன்னை பாதுகாத்துக் கொள்ளவேண்டும். ஆட்சி செய்யும் அரசனுக்கு காவலாய் இருத்தல் வேண்டும். புயன்வழி செல்லாமை. பெண் மயக்கத்தில் வீழாமை ஆகிய குணங்களே அமைச்சனுக்கு அழகு என்று ஏலாதி கூறுகிறது.

அரசனைக் காட்டிலும் அமைச்சனுக்கு வீரம், கற்றறிந்த புலமை, சோம்பலின்மை ஆகியவை வேண்டும். அமைச்சன் காட்டும வழி உறுதியாக இருந்தால்தான் நாடு காக்கப்படும். இல்லாவிடில் அந்நியனுக்கு அடிமையாகி விடும். ஆகவே, மேலே கூறப்பட்ட நல்ல குணங்களை, தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும் என்பது பொருளாகும்.

அ.பொ.

வன்கண்மை–வீரம்.ட கூடம்–வஞ்சனை. மடி–சோம்பல். ஓம்பு–பாதுகாத்து. நாற்றம்–வாசகம்.

18. அரசனுக்கு அழகு

போகம் பொருள் கேடுமான்வேட்டம் பொல்லக்கள்
சோகம்படும் சூதுசொல்வன்மை-சோகக்
கடும்கதத்துத் தண்டம் அடங்காமை காப்பின்
அடும் கதம்இல் ஏனை அரசு.

விளக்கவுரை

பெண்களுடன் கொள்ளும் இன்ப உறவும், தேடிய பொருளை பத்திரப்படுத்தாமல் அழித்தலும், விலங்குகளை வேட்டையாடி கொல்லுதலும், கள்ளுண்ணலும், துயரத்தைத் தரும் சூதாட்டடும், சுடு சொல்லும். கோபம் கொண்டு போர் செய்தலும் ஆகிய செயல்களுக்கு இடம் கொடுக்காமல் தன்னை பாதுகாத்துக் கொள்ளும் அரசனோடு மற்ற அரசர்கள் சினம் கொண்டு போர் செய்ய வரமாட்டார்கள் என்று ஏலாதி கூறுகிறது.

பெண்கள் மயக்கத்தில் இருக்கும் அரசன் குடிமக்களின் நலனை சிந்திக்க மாட்டான். பொருளை வீண் செலவு செய்து அழிப்பான். சூதாட்டமும், கோபமும் அவளிடம் இருந்தால் கஜானா காலியாகி எதிரிகளுக்கு பலவீனனாகி விடுவான். இந்த தீய செயல்கள் இல்லாத மன்னனிடம் வேறு மன்னர்கள் போல் செய்ய வரமாட்டார்கள் என்று கூறிய இந்த அடிப்படையில்தான்.

அ.பொ.

போகம்-கூடுதல். கேடு-அழிவு. மான்-விலங்கு. வேட்டம்-வேட்டை. சோகம்-துயரம். சொல்வன்னம்-வன்சொல். கரம்-துன்பம். தண்டாம்-போர்.

19. பெரியோர்க்கு பெருமை சேர்ப்பவை

கொல்லான் கொலைபுரியான் பிறர்மனைமேல்
செல்லலான் சிறியார் இனம்சேரான்-சொல்லும்
மறையில் செவிஇலன் தீசுசொற்கண் மூங்கை
இறையில் பெரியார்க்கு இவை.

விளக்கவுரை

தான் ஒரு உயிரை கொல்லாதிருத்தல், உயிர்களை மறறவர்கள் கொல்வதை விரும்பாமை, பொய் சொல்லாமை, மாற்றான் மனைவியை விரும்பாமை, கீழ்மக்களுடன் சேராமை, மனைவிக் கூறும் சொற்களுக்கு காது கொடாமை, தீய சொற்கள் பேசுவதில் ஊமையாகி விடுதல். இவை தலைமைத் தன்மையில் உயர்ந்தோர்க்கு உரிய பண்புகளாகும் என்று ஏலாதி கூறுகிறது.

ஒழுக்க நெறிகளையே திரும்ப, திரும்ப ஏலாதி கூறுகிறது. ஒழுக்கம்தான் எல்லா சிறப்புகளுக்கும் மூலகாரணமாகும். ஒழுக்கமுடையவர்கள் செய்யும் தவம், வேண்டுதல் அனைத்தும் வெகுஎளிதில் சித்தியாகும். தீவினைகள் மிகுந்திருப்பவர்களின் வேண்டுதல்கள் கால தாமதமாவதற்கு பாவமே காரணம். அரசனாக இருந்தாலும் சரி... ஆண்டியாக இருந்தாலும் சரி... பாமரனாக இருந்தாலும் சரி... பண்டிதனாக இருந்தாலும் சரி... ஒழுக்கமே உயர்ந்த பண்பு என்பதை எப்போதும் நினைவில் கொள்ளவேண்டும்.

அ.பொ.

மூங்கை–ஊமை. இறையில்–தலைமைப் பண்பில்.

20. இவை மனித இயல்புகள்

மின்நேர் இடையார் சொல்தேறான் விழைவு ஓரான்
கொன்னே வெகுளான் கொலைபுரியான்-பொன்னே
உறுப்(பு) அறுத்தன்ன கொடைஉவப்பான் தன்னின்
வெறுப்(பு) அறுத்தான் விண்ணகத்தும் இல்.

விளக்கவுரை

பொன் போன்றவளே... மின்னலைப் போன்ற மெல்லிய இடைஉடைய பெண்களின் சொற்களைக் கேளாதவன். அவர்களோடு கூடி மகிழ்வதை விரும்பா

தவன். வீணான கோபம் கொள்ளாதவன், உயிர்க் கொலை விரும்பாதவன். தன் உடல் உறுப்பு ஒன்றையே அறுத்துக் கொடுக்க வேண்டிய நிலைவரினம் அதனைச் செய்யத் தயங்காத கொடைத் தன்மை கொண்டவன், தன் உள்ளத்துள் தோன்றும் வெறுப்பை விட்டொழித்தவன் விண்ணுலகிலும் இல்லை என்று ஏலாதி கூறுகிறது.

மேலே கூறப்பட்ட குறைபாடுகள் இல்லாதவர் விண்ணுலகிலும் இல்லை என்று கூறியது. விண்ணுலக தேவர்களும் இந்த குறைபாடு உடையவர்கள்தான் என்று பொருளாகும். ஆனால், மனிதர்கள் இந்த குறைபாடு களுடன் வாழலாம் என்று இதற்குப் பொருள் அல்ல. தேவர்களைக் காட்டிலும் மனிதனே மேலானவன். மனிதன் நினைத்தால் முக்தியடைய முடியும். தேவர்கள் போகத்தில் திளைப்பவர்கள் என்பதால் மண்ணுலகு வந்து தான் அவர்கள் முக்தியை அடைய முடியும். ஆகவே, மனிதர்கள் வைராக்கியத்தால் இந்த குறைபாடு களை அகற்றி மேலான நிலையை அடையலாம். இச் சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

கொடை–பயன் கருதாது பிறர்க்கு செய்யும் உதவி. உவப்பு–விருப்பு. வெறுப்பு–பகை உணர்வு. அறுத்தான்–விட்டொழித்தவன். விண்ணுலகத்து–வானுலகில் இல்லை.

21. வாழும் முறை

இளமை கழியும் பிணி மூப்பு இயையும்
வளமை வலிஇவை வாடும்–உளநாளால்
பாடே புரியாது பால்போலும் சொல்லினாய்
வீடே புரிதல் விதி.

விளக்கவுரை

பால்போல் இனிக்கும் மொழி பேசும் பெண்ணே. வாழ்வில் இளமைப் பருவம் நிலையானதல்ல. விரைந்து

போய்விடும். நோய்... முதுமை வந்து சேரும். செல்வமும், உடல் வலிமையும்கூட சிறிது சிறிதாக குறையும். ஆகவே, இளமை இருக்கும்போதே பிறருக்கு தீமை செய்யாமல் வீட்டின்பம் பெறுதற்கு ஏற்ற நற்செயல்களை மேற் கொண்டு வாழ்வதே வாழும் முறை என்று ஏலாதி கூறு கிறது.

நற்செயல்களை செய்வதால் தீவினை அழியும். ஆனால், முக்தி கிட்டாது. தீவினை என்பது இரும்பு சங்கிலி. நல்ல செயல்கள் என்பது தங்க சங்கிலி. இரண் டுமே மனிதனை அடிமைப்படுத்துகின்றன. ஆகவே, இவ்விரண்டினையும் அகற்றி மேலே செல்ல வேண்டும். தனக்குள் இருக்கும் இறை ஒளியாகிய ஆத்மாவை அல்லும், பகலும் தியானித்து சித்தியடைதலே வீடு பேறு என்பதை புரிந்து கொள்ளவேண்டும். இச்சிந்தனை களைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

வளமை-செல்வம். வலி-உடல் வலிமை. வாடும்-குறையும். உளநாளில்-உளமையும், செல்வமும், உடல் வலிமையும் இருக்கும் போதே. வீடு-முக்தி. புரிதல்-விரும்புதல். விதி-முறை. உளநாளால்-எஞ்சியுள்ள நாளில்.

22. அஞ்சாமை ஆறு

வாள் அஞ்சான் வன்கண்மை அஞ்சான் வனப்பு அஞ்சான்
ஆள் அஞ்சான் ஆம்பொருள்தான் அஞ்சான்-நாளஎஞ்சாக்
காலன் வரவுஒழிதல் காணின் வீடுஎய்திய
பாலின் நூல் எய்தப்படும்.

விளக்கவுரை

தாக்கவரும் வாளுக்கு அஞ்சாதவன். பகைவரின் கொடும் செயலுக்கு பயப்படாதவன். உயர்ந்த தோற்றப் பொலிவு கண்டு பயப்படாதவன். ஆள் வலிமை கண்டு

அஞ்சாதவன். செல்வச் சிறப்புக்கு அஞ்சாதவன், ஒருநாள் கூட குறையாமல் குறித்த நாளில் உயிரைக் கொண்டு போக வரும் எமனின் தூதுவன் வராமல் இருக்கமாட்டான் என்பதை உணர்ந்தால் முக்தி நலம் கூறும் அறிய நூல்கள் கூறும் கருத்தின் பயன் அடைவான் ஏலாதி கூறுகிறது.

எமன் வருவான் என்பதை எல்லோரும் உணர்ந்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் முக்தியடைவதில்லை என்பதை நாம் அறிவோம். முக்தி என்னபது மரணத்தை வெல்லுதல். அதாவது, மரணம் அடையாமல் ஜீவன் முக்தி பெறுதல். அதற்கான வழிகளில் நடக்காமல் முக்தி எப்படி கிடைக்கும். எமனின் தூதன் வருவான் என்பதை அறிந்தால் மட்டும் போதாது. எல்லா பற்றுக்களையும் நீக்கி, தூய்மை நிறையப் பெற்று, தவத்தின் மூலம் அடைவதே முக்தி. இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் சிவபாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

வன்கண்மை–கொடுமை. வனப்பு–தோற்றம். ஆள்–ஆள்வலிமை. நாள்எஞ்சா–நாள் குறையாது. காலன்–எமதூதன். வீடு–முக்தி பேறு. நூல்–அறத்தோடு. எய்தல்–அடைதல்.

23. துறவிக்கு அழகு

குணம்நோக்கான் கூழ்நோக்கான் கோலமும் நோக்கான்
மணம்நோக்கான் மங்கலமும் நோக்கான்–கணநோக்கான்
கால்காப்பு வேண்டான் பெரியார் நூல்காலற்கு
வாய்காப்பு கோடல் வனப்பு.

விளக்கவுரை

கால்கட்டு என்னும் இல்லற வாழ்வை விரும்பாதவன், நல்ல குணநலன்களைப் பற்றி கவலைப்படாதவன்.

செல்வத்தை மதிக்காதவன். அழகை விரும்பாதவன். திருமணத்தை நினையாதவன். தான, தருமம் புண்ணியம் பற்றி எல்லாம் சிந்திக்காதவன். கற்றறிந்தவர்களைப் போற்றாதவன் என்ற இயல்புகள் துறவிக்கு உண்டு. 'காலன்' வரும் விழிக்கு காவலாக உள்ள கற்றறிந்த பெரியோர் கூறிய நூல் வழி நிற்றல் அழகுடைய செயலாகும் என்று ஏலாதி கூறுகிறது.

கற்றறிந்த பெரியோர் நூலில் கூறுவது என்ன? நீ அழியும் உடல் அல்ல. அழியாத ஆத்மா. உனக்கு மரணம் இல்லை. நீ பிறந்ததும் இல்லை. இறந்ததும் இல்லை. நீ நித்லன். உலக விவகாரங்கள் அனைத்தும் உன் ஆத்மாவில் பிரதிபலித்தன. அவ்வளவுதான் உன்னை வீழ்த்தக் கூடியவர். விண்ணகம், மண்ணகம் போன்ற எந்த உலகிலும் இல்லை. இதுவே வேதத்தின் சாரம். இதுதான் உண்மையான கல்வி. இதைச் கற்றவர்களே உண்மையும் கற்றவர்கள். இதை அறிந்து வாழ்க்கையை நடத்தினால் போதும். வேறு எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டியதில்லை என்பது இதற்கு அர்த்தமாகும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

கூழ்–செல்வம். கோலம்–தோற்றம். மணம்–திருமணம். மங்கலம்–புண்ணியப் பலன். கணம்–சுற்றம். காலற்கு–காலனுக்கு. வாய்காப்பு–வாயிலுக்கு வரும் வழிக்கு காவல். கோடல்–கொள்ளுதல். வனப்பு–அழகு.

24. பிறவாமை வேண்டுமா?

பிணிபிறப்பு மூப்பொடு, சாக்காடு துன்பம்
தணிவில் நிரப்பு இவைதாழா-அணியின்
அரங்கின்மேல் ஆடுநர்போல் ஆகாமல் நன்றாம்
நிரம்புமேல் வீட்டு நெறி.

விளக்கவுரை

நோய் வருத்தம். பிறத்தல். வயோதிகம் அடைதல். இளைத்தல், துன்பம், வற்றாத ஏழ்மை இவையெல்லாம் வந்தடையும் வேறு வேறு வேடங்கள் புனைந்து கொண்டு நாடக மேடையில் ஆடாமல் நடிக்கும் பாத்திரத்திற்கு ஏற்ப மேடையில் ஒருவரே வேறுவேறு வேடங்கள் தரிக்கிறார். பிறந்து, இறந்து மீண்டும் பிறந்து துன்பப்பட தேவை இல்லாத துறவே பிணி, மூப்பு சாக்காடு இல்லாத உயர்வாழ்வு என்று ஏலாதி கூறுகிறது.

இதுவும் வேதத்தின் சாரம்தான். ஒரே பரம்பொருள் கோடிக்கணக்கான உயிர்களாக வாழ்கிறது. பிறகு அதே பரம்பொருளிடம் ஐக்கியமாகிறது. நமக்கும் மற்றொரு மனிதருக்கும் வேறுபாடு இல்லை. ஏத்தம் சம்பந்தப்பட்ட ஒரே உறவுகள் தான் நாம் எல்லோரும். அதனால்தான் ஒருவருக்குச் செய்யும் துன்பம் திருப்பி விதி என்ற வடிவில் நம்மைத் தாக்குகிறது. இதுவே மெய்ஞானம். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

பிணி-நோய். மூப்பு-முதுமை. சாக்காடு-மரணம். தணிவிலா-குறையாத. நிரப்பு-வறுமை. அணி-ஒப்பனை.

25. துன்பம் தோன்றும் இடம்

பாடகம் சாராமை பாத்திலார் தாம்விழையும்
நாடகம் சாராமை நாடுங்கால்-நாடகம்
சேர்ந்தால் பகைபழி தீச்சொல்லே சாக்காடே
தீர்ந்தால் போல் தீரா வரும்.

விளக்கவுரை

பொது மகளிர் நமக்கு எந்தவகை இடமியிலும் உரிமையில்லாதவர்கள். அவர்கள் பாடுகின்ற இடங்களுக்

கும் போகாமலும் ஆகும். நாடகங்களுக்கு போகாமலும் ஆகும். நாடகங்களுக்கு போகாதிருங்கள். அப்படி சென்றால் தீராத பகை, தீச்சொல், சாக்காடு இல்லாதது போல்தோன்றும். ஆனால், விரைவில் அதனால் துன்பம் வரும் என்று ஏலாதி கூறுகிறது. ஒரே உருவம் பல வேடங் களை புனைகிறது என்று முன்பு சொல்லப்பட்டது. விலை மகளிரிட அழியாத ஆத்மா உள்ளது. அவர்களுடைய உடல்தான் இழிவானது ஆத்மா தூய்மையானதுதான். அவர்களுடன் தொடர்பு கொண்டால் நம் உடலுக்கு கேடு, மரணம் வரும் என்பதையே ஏலாதி கூறுகிறது என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

அ.பொ.

பகை–விரோதம். பழி–அவமானம். தீச்சொல்–தீ போல மனதைச் சுட்டு வருத்தும் வார்த்தைகள். சாக்காடு–மரணம். தீர்ந்தால்போல்–இல்லாததுபோல். தீராவரும்–விடாது வந்து பற்றும்.

26. தூதர்க்கு அழகு

மாண்டு அமைந்து ஆராய்ந்த மதிவனப்பே வன்கண்மை
ஆண்டு அமைந்த கல்வியே சொல்லாற்றல்-பூண்டமைந்த
காலம் அறிதல் கருதுங்கால் தூதுவர்க்கு
ஞாலம் அறிந்த புகழ்.

விளக்கவுரை

ஒழுக்கத்தில் உயர்ந்திருத்தல், ஆராய்ந்தறியும் அறிவுத் திறன், தோற்றப் பொலிவு, எவருக்கும் அஞ்சாத வீரம். கற்றறிந்தடங்கிய கல்வி அறிவு, கேட்பவர்களைக் கவரும் பேச்சாற்றல், காலம் அறிந்து செயல்படல் தூதர்க்கு எழில் சேர்ப்பவை என்று ஏலாதி கூறுகிறது.

இந்த தகுதிகள் நிறைந்திருக்கும் தூதர்கள் அரசனுக் கும்... நாட்டிற்கும் அணிகலன்கள் போன்றவர்கள் என்பது உட்கருத்து.

அ.பொ.

மாண்ட–சிறந்த. மதி–அறிவு. வனப்பு–தோற்றம். வன்கண்மை – வீரம். ஆண்டமைந்த–தேர்ந்து தெளிந்த.

27. விடவேண்டியவை

அஃகுநீ செய்யல் எனஅறிந்து ஆராய்ந்தும்
வெஃகல் வெகுளலே தீக்காட்சி-வெஃகுமான்
கள்ளத்த அல்ல கருதின்இவை மூன்றும்
உள்ளத் தவாக உரை.

விளக்கவுரை

பிறர் பொருளை விரும்புவதையும், பிறர்மேல் வீணாக கோபப்படுதலும், தீயவைகளைப் பார்ப்பதும், ஆகிய மூன்றையும் விட்டொழிப்பாயாக. இம்மூன்றும் தீயவை என்று தெரிந்தும் அவற்றை ஒருவன் விரும்பி செய்கிறான் என்றால் அதற்கு என்ன காரணம் என்பதை நினைத்துப் பார்த்தால் அவன் இதை விரும்பிச்செய்வது கள்ள மனத்தால் அல்ல. உள்ளத்தில் உறையும் ஒரு உயர்ந்த குறிக்கோளுக்காகச் செய்கிறான் என்று கொள்வாயாக என்று ஏலாதி கூறுகிறது.

பொய்ம்மை வாய்மை உடைத்து புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனில் என்னும் பொருள் இதற்கு அடிப்படையாகும்.

அ.பொ.

அஃகு–விடு. அறிந்து–உயர்ந்து. ஆராய்ந்து–தெளிந்துணர்ந்து. வெஃகல்–விரும்புதல். வெகுளல்–சினம் கொள்ளுதல். வெஃகுமான் – விரும்புவினாகில்.

28. பெரியோர் குணம்

மைஏர் தடங்கண் மயில் அன்னாய் சாயலே
மெய்யே உணர்ந்தார் மிகஉரைப்பர்-பொய்யே
குறளை கடுஞ்சொல் பயனிலசொல் நான்கும்
மறலையின் வாயினவாம் மற்று.

விளக்கவுரை

அஞ்சன மைதீட்டிய அழகிய பெரிய கண்களையும், மயில் போன்ற சாயலும் உடையப் பெண்ணே... பெரியோர்கள் மேலான சொற்களையே உண்மையில் பேசுவர். மற்றபடி பொய், கோள், கடுஞ்சொல், வீண் வார்த்தை ஆகிய நான்கும் அறிவற்ற அறிவுலிகளாகிய மூடர்களின் வாயிலிருந்து வருபவையாகும். பெரியோர்கள் நல்ல குணங்களைப் பெற்றிருப்பதற்கு என்ன காரணம்?

அவர்கள் செய்த நல்ல செயல்கள் வினைகளை சாம்பலாக்கி விட்டது. அதனால், நல்ல குணங்கள் நிறைந்த பெரியோர்களாக இருக்கிறார்கள். மூடர்கள் தீய குணங்களைப் பெற்றிருப்பதற்கு காரணம் அவர்கள் செய்த தீவினைகளின் விளைவே காரணம். ஆகவே, அவர்கள் வைராக்கிய சித்தத்துடன் நல்ல செயல்களை மலைபோல் குவிக்க வேண்டும். வேறுவழி இல்லை. ஒரு வினையின் பயனை அனுபவித்து முடிக்கும் வரை அந்த வினையை அழிக்க முடியாது என்பதை மனதில் பதிய வைக்க வேண்டும். இச் சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

மை–கண்மை. ஏர்–அழகு. தடம்–பெரிய. அன்னாய்–ஒப்பானவன். சாயல்–மென்மை. உணர்ந்தோர்–நல்லறிவுடையோர். குறளை–கோள் சொல்லுதல். கடுஞ்சொல்–சுடுசொல். பயனில–வீணான. மறலை–அறிவிலி.

29. இது உயிரின் இயற்கை

நிலைஅளவில் நின்ற நெடியவர்தாம் நேரா
கொலைகளவு காமத் தீ வாழ்க்கை–அலைஅளவி
மைஎன நீள் கண்ணாய்ஸ் மறுதலைய இம்மூன்றும்
மெய்அளவு ஆக விதி.

விளக்கவுரை

தங்களுக்கு ஏற்றநிலையில் நல்லொழுக்க நெறி நின்று வாழும் உயர்ந்தோராகிய மேன்மக்களிடம் கொலை செய்தல். திருடுதல், கொடிய தீ போல சுடும் காமமாகிய தீய பெண்ணாசையும் உண்டாகாது. அத்தீய குணங்கள் சேராது. புரளும் இயல்புடைய மை தீட்டிய நீண்ட கண்களை உடையவளே... இவற்றிற்கு நேர்மாறான கொலை செய்தல். திருடுதல், காதல் வாழ்வும் ஆகிய இம்மூன்றும் உயிர் இயற்கை என்பதை அறிவாயாக... இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

இயற்கையென்பது நம்மை துன்பத்தில் தள்ளுகிறது. இதையே உயர் இயற்கை என்று ஏலாதி கூறுகிறது. ஆனால், நம் இங்கு பிறந்திருப்பது அந்த இயற்கையை வெல்வதற்குதான். அடங்கி வாழ்வதற்காக அல்ல. நமக்குள்ளே இருக்கும் ஆன்மாவுக்கு முன்னே எல்லாமே அடிபணிந்தாக வேண்டும். நாமும் உயர்ந்தோராக மாற வேண்டும் என்பது உட்கருத்து.

அ.பொ.

நேரா-அடையாது. காமத்தீ வாழ்க்கை-காமமாகிய தீய வாழ்க்கை. அலை அளவி-அலைபோலப் புரளும். மறுதலைய-நேர்மாறான (கொலைக்கு நேர்மாறு கொல்லாமை, களவுக்கு மாறுதலை திருடாமை, காமவாழ்வுக்கு எதிர்காதல் வாழ்வு) மெய்யளவு ஆக-உடலின் இயல்பு ஆக. விதி-முறையாகும்.

30. மக்களின் வகை

மாண்டவர் மாண்ட அறிவினான் மக்களைப்
பூண்டுஅவர் போற்றித் புரக்குங்கால்-பூண்ட
ஔரதனே கேத்திரசன் கானீனன் கூடன்
கிரிதன் பௌநற்பவன் பேர்.

விளக்கவுரை

மிகுந்த அறிவில் சிறந்த சான்றோராகிய புகழ் உடையவர்கள். தம் மக்களைக் காத்து வளர்த்து வரும் போது, அந்த மக்கள் ஔரதன், கேத்திரசன், கானீனன், கூடன், கிரிதன், பௌநற்பவன் என்னும் பெயர்களைப் பெறுவர். அதாவது உலகத்தில் பிறந்துள்ள மக்களின் வகை பற்றி இப்பாடல் கூறுகிறது. கணவனுக்குப் பிறந்தவன், வேறு ஒருவனுக்குப் பிறந்தவன். கன்னிக்குப் பெற்றவன். களவில் பிறந்தவன், விலைக்கு வாங்கியவன், விதவைக்கு பிறந்தவள் என்பது இந்த மக்கள் வகையாகும்.

அ.பொ.

ஔரதன்-கணவனுக்குப் பிறந்தவன். கேத்திரசன்-வேறு ஒருவனுக்குப் பிறந்தவன். கானீனன்-கன்னிக்குப் பிறந்தவன். கூடன்-களவில் பிறந்தவன். கிரிடன்-விலைக்கு வாங்கியவன். பௌநற்பவன்-விதவைக்குப் பிறந்தவன்.

31. பிள்ளைகள் வகை

மத்த மயில்அன்ன சாயலாய் மன்னியசீர்த்
தத்தன் சகோதடன் கிருத்திரமன்-புத்திரி
புத்ரன் அபவித்தனொடு பொய்இல் உபகிருதன்
இத்திறத்த எஞ்சினார் போ.

விளக்கவுரை

காண்பவர் கண்களுக்கு மகிழ்ச்சி தரும் மயில் போலும் அழகும் சாயலுடைய பெண்ணே... நிலைத்த சிறப்புடைய தத்தன்-சகோடன், கிருத்திரமன், மகன் மகளும், அபிவித்தகன், பொய்மை இல்லாத உபகிருதன் என்னும் இவர்களும் முன் பாடலில் கூராது விடுபட்ட மீதம் உள்ள பெயர்கள் என்று ஏலாதி சுட்டிக்காட்டு கிறது.

அ.பொ.

மத்த-மகிழ்ச்சி. அன்ன-போன்ற. சாயல்-அழகு. மன்னிய-நிலைத்த. சீர்-சிறப்பு. புத்திரி-மகள், புத்ரன்-மகன். பொய்இல்-பொய்யாத. இத்திறத்த-இத்தன்மைய. எஞ்சினார்-மீதம் உள்ளவர்கள். பேர்-பெயர்களாகும்.

32. இவன் தேவாதி தேவன்

உரையான் குலம்குடிமை ஊனம் பிறரை
உரையான் பொருளொடு வாழ்வாயு-உரையானாய்ப்
பூஆதி வண்டு தேர்ந்துஉண் குழலாய் ஈத்துண்பான்
தேவாதி தேவனாம் தேறு.

விளக்கவுரை

தான் பிறந்த குலத்தின் பெருமையையும், குடிசிறப்பையும் புகழ்ந்து தன்னைத் தானே பாராட்டிக் கொள்ள மாட்டான். அதேபோல் குலசிறப்பும், குடிப்பெருமையும் இல்லாத மற்றவர்களின் குறைகளைச் சொல்லிக் காட்டி இழிவாகப் பேசமாட்டான். தன்னுடைய பெரிய செல்வத்தை, வாழ்நாள் பற்றியும் பேசிப் பெருமை பாராட்டிக் கொள்ளமாட்டான். பூ முதலானவற்றில் தேனுள்ளவையாகப் பார்த்து அவற்றில் சுவையான தேனுள்ள மலர்களையோ, கனிகளையோ தேர்ந்தெடுத்து உண்ணும், வண்டுகள், மொய்க்கும் நறுமணம் மலர் அணிந்த பெண்ணே. பிறருக்கு கொடுத்து தானம் செல்வ பயனை அனுபவித்து வாழ்பவனாகிய இவர்கள் வானுல தேவர்களுக்கும் மேலான தேவனாய் திகழ்வான் என்பதை தெரிந்து கொள்வாயாக என்று ஏலாதி கூறுகிறது.

தன்னைத் தானே பாராட்டாதவன் பிறரை இழிவாகப் பேசாதவன். செல்வத்தை மற்றவர்களுக்கு தந்து தானும் அனுபவிப்பவன் தேவாதி தேவன் என்று கூறியது. இத்தகைய நற்குணங்கள் நிறைந்தவர்கள் தங்கள் சொந்த

வடிவான தெய்வ வடிவமாக மாறிக் கொண்டிருப்பவர்கள் என்பது உட்கருத்தாகும்.

அ.பொ.

ஊனம்–குறை. ஆயுள்–வாழ்நாள் என்பது கடை குறைய வந்துள்ளது. பூஆதி–மலர் முதலான. குழலாய்–கூந்தல். உடைய பெண்ணே. ஈத்துண்பான்–பிறருக்குக் கொடுத்துதவித் தானும் உண்டு மகிழ்பவன்.

33. இவன் விண்ணவர்க்கு அரசன்

பொய்உரையான் வையான் புறம்கூறான் யாவரையும்
மெய்உரையான் உள்ளனவும் விட்டுஉரையான்–எய்உரையான்
கூந்தல் மயில்அன்னாய் குழீயவான் விண்ணோர்க்கு
வேந்தனாம் இவ்வுலகம் விட்டு.

விளக்கவுரை

பொய் சொல்லாதவன், பிறரை ஏசாதவன், மற்றவர்களை குறை கூறி தூற்றாதவன், பிறர் துன்பம் போக்க தான் உணர்ந்த உண்மையை சொல்லாதவன், தன்னிடம் உள்ள செல்வத்தை வெளிக்காட்டிக் கொள்ளாதவன், தன் வறுமையை நிலையை பிறரிடம் கூறாதவன் ஆகிய இவர்கள்... மயில் தோகைப் போன்ற நீண்ட கூந்தலையுடைய பெண்ணே... வானுலகில் சூழ்ந்துள்ள தேவர்களுக்கு அரசனாக விலங்குவார்கள் என்று ஏலாதி கூறுகிறது.

ஒழுக்கநெறிகளையே திரும்ப, திரும்ப ஏலாதி கூறுகிறது. ஒழுக்கமும், தூய்மையும் தான் மனிதனை தேவனாக்கிறது. தேவர்களுக்கும் தலைவன் ஆக்குகிறது. அதையும் தாண்டி தெய்வமாகவும் மாற்றுகிறது என்பது பொருளாகும்.

அ.பொ.

மெய்-உண்மை. கூறான்-சொல்லான். வைதல்-திட்டுதல். புறம்கூறுதல்-பழித்தல்.

34. தேவர்களும் விரும்புவர்

சிதைஉரையான் செற்றம் உரையான் சீறுஇல்லான்
இயல்பு உடையான் ஈனம்உரையான்-நசைஅவர்க்குக்
கூடுவது ஈவானைக் கொவ்வைபோல் செவ்வாயாய்
நாடுவர் விண்ணோர் நயந்து.

விளக்கவுரை

கீழ்த்தரமாக பேசாதவன், பகை உணர்வு பொங்காதவன், சீறிப் பாய்வது போல கோபம் கொண்டு பேசாதவன், தன்னைப் பற்றி தற்புகழ்ச்சி பேசிக் கொள்ளாதவன், பிறரை தாழ்த்தி இகழ்ந்து பேசாதவன், தன்னை விரும்பி தேடி வருபவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் இயன்றதைத் தந்து உதவுபவன் ஆகிய இவர்களை கொவ்வைப் பழம் போன்ற சிவந்த வாயுடையப் பெண்ணே... வானவர்கள் விரும்பி ஏற்று மகிழ்வர் என்று ஏலாதி கூறுகிறது.

மேலே கூறிய நற்பண்புகள் சாத்வீகத்தைச் சேர்ந்து தெய்வ வடிவம் பெறப் போகிறவர்கள்தான் இந்த நற்குணங்களைப் பெறுவார்கள். இந்த குணங்கள்தான் உள்ளே இருக்கும் ஆத்மாவை காட்டக் கூடிய அஸ்திரங்கள். ஆத்ம தரிசனம் கிடைத்த பிறகு வானவருக்கும் மேலான தெய்வமாகவே மனிதன் மாறி விடுவான். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

சிதை-கீழ்மை. செற்றம்-பகை. சீறு-சிற்றம். இயல்பு-தன்மை.

35. இவர் அரசர்

துறந்தார் துறவாதார் துப்பிலார் தோன்றா(து)
இறந்தோர் ஈடுஅற்றார் இனையர்-சிறந்தவர்க்கும்
பண்ஆளும் சொல்லாய் பழிஇல் ஊண பால்படுத்தான்
மண்ஆளும் மன்னனாய் மற்று.

விளக்கவுரை

இன்னிசையைப் பழிக்கும் இனிய சொற்களை யுடையப் பெண்ணே... திக்கற்றவர்கள், விருந்தினர்... ஏழைகள்... மூதாதையர், வறியவர், இவர் போன்றவர் களுக்கும், கற்றறிந்த பெரியோர்களுக்கும் உணவிட்டு உதவி வாழ்பவர், மறுபிறப்பில் மன்னராக ஆளும் சிறப்புடன் பிறப்பர் என்று ஏலாதி கூறுகிறது.

திக்கற்றவர்களுக்கு உதவி செய்பவர்கள், பெரியோர் களை மதிப்பவர்கள் அரசனாகும் சிறப்பைப் பெறுவார்கள் என்று பலமுறை ஏலாதி கூறிவிட்டது. அரசன் என்ற சிறப்பு இறுதியானது அல்ல. அதையும் தாண்டி செல்ல வேண்டும். இவை படிகள், பட்டம், அரசு பதவி எல்லா வற்றையும் தாண்டி எல்லோரும் மகான் ஆகவேண்டும். மரணத்தை வென்று, அச்சத்தை வென்று பரிபூரண பேரானந்த வாழ்வை படிப்படியாக பெற்றாக வேண்டும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

இனையர்-சிறுவர். துறந்தார்-மற்றவர்களால் கைவிடப்பட்ட அநாதைகள். இறந்து தோன்றார்-இறந்து மறைந்த மூதாதையர்.

36. இவர் இமையவர்க்கு இனிமையானவர்

காலில்லார் கண்இல்லார் நாவில்லார் யாரையும்
பால்இல்லார் பற்றிய நூல்இல்லார்-சாலவும்
ஆழப்படும் ஊண்அமைந்தார் இமையவரால்
வீழப் படுவார் விரைந்து.

விளக்கவுரை

நடப்பதற்கு கால் இல்லாதவர்கள். பார்க்க பார்வை அற்றவர்கள். வாய்ப் பேசமுடியாத ஊனமகள், யாரையும் அண்டியிருக்க முடியாத திக்கற்றவர்கள். பிழைப்பதற்கு போதிய கல்வியறிவு இல்லாதவர்கள் ஆகியோர்களுக்கு பதிவோடு வயிறு நிலைய உணவு தருபவர்கள் வானில் உரையும் தேவர்களால் விரும்பப்படுவார்கள் என்று ஏலாதி கூறுகிறது.

முந்தைய விளக்கவுரைகளில் பலமுறை கூறியிருக்கிறோம். ஏற்கிறவர்கள் தாழ்ந்தவர்கள் என்று நினைக்கக் கூடாது. மேலே கூறப்பட்ட நிலையில் இருப்பவர்கள் இறைவனின் வடிவங்கள். இறைவனே அவ்வாறு வந்திருக்கிறான். நம்முடைய கர்ம வினைகளை இந்த புண்ணியம் என்னும் நெருப்பால் சாம்பலாக்க அவனே நமக்கு உதவி புரிய இந்த அவலக்கோலங்கள் பூண்டுள்ளான் என்பதை மறக்கக் கூடாது.

அ.பொ.

பால்–பக்கம். நூல்–கல்வி. சாலவும்–மிகவும். ஆழப்படும்–நெடுநாள் பசியால் வாழக்கிடந்த வயிறு நிறைக்கும் உணவு.

37. நன்மை செய்க காலன் வரும் முன்னே

அழப்போகான் அஞ்சான் அலறினால் கேளான்
எழப்போகான் ஈடற்றான் என்றும்-தொழப்போகான்
என்னேஇக் காலன் ஈடுஓரான் தவம்முயலான்
கொன்னே இருத்தல் குறை.

விளக்கவுரை

அழுதாலும் போகமாட்டான். வீரம் உடையவன் என்று பயந்து விடமாட்டான். கதறி அழுதாலும், கேட்க மாட்டான் எழுந்து வரவேற்று உபசரித்தாலும் விட்டு விடமாட்டான். இவன் தனக்கு நிகர்அல்ல என்று தெரிந்

தாலும், விலகமாட்டான். வணங்கித் தொழுதாலும் போக மாட்டான். இதுவே எமனின் குணம். முதன்முதலில் இறந்தவன் இந்த எமன்தான். அதனால் எமன் பதவியைப் பெற்றவன். இவனே இறந்து பதவியை பெற்றவன் என்ப தால் தன் கடமையை செய்ய தயங்காதவன் என்பது பொருள். ஆகவே, பிரமனின் செய்கை தெரிந்திருந்தும் தவம் செய்யாமல் இருக்கலாமா? உள்ளே இருக்கும் ஆத்ம ஒளியின் ஆற்றலின் முன்னே இந்த எமன்... மற்ற தேவர்கள் அனைவரும் ஆற்றலற்றவர்கள் என்றே பேருண்மையை அறியாமல் இருக்கலாமா...? இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

ஏழ–எழுந்து வரவேற்க. ஈடு–தனக்கு நிகர். என்னே–வியப்பு. காலன்–எமதூதன்.

38. இது தவம் அல்ல

எழுத்தினால் நீங்காது எண்ணால் ஒழியாது ஏத்தி
வழுத்தினால் மாறாது மாண்ட-ஒழுக்கினால்
நேராமை சாலஉணர்வார் பெருந்தவம்
போகாமை சாலப் புலை.

விளக்கவுரை

மந்திரத்தை ஓயாமல் கூறுவதும், அதன் எண் ணிக்கையை மறக்காமல் இருப்பதும், புகழ்ந்து... போற்றி தோத்திரம் செய்வதை மறக்காமல் இருப்பதும், உயர்ந்த ஒழுக்கமில்லாமல் தவம் செய்யாமையும் இழிந்த செயல் என்றும் இது தவம் அல்ல என்றும் ஏலாதி கூறுகிறது.

நல்லொழுக்கத்துடன் வாழ்ந்து பிறருக்கு உதவிகள் செய்வது, தவம் இயற்றி பிறவியை ஒழிக்க வேண்டும். பிறருக்கு கெடுதல் செய்து கொண்டு புரியாத மந்திரங்களை சொல்வதால் பயன் இல்லை. என்பது பொருளாகும். தவம்

என்பது நெருப்பு போன்றது. துன்பங்களை அது சாம்ப லாக்கி விடும். ஆனால், வெறும் மந்திர உச்சரிப்பு தவம் ஆகாது. ஒழுக்கநெறியில் ஒழுகவேண்டும். அந்த ஆற்றலை இறைவனிடம் வேண்ட வேண்டும். பிறருக்கு தன்னால் முடிந்த உதவிகளை செய்து கொண்டே இருக்க வேண்டும். இதுவே உண்மையான தவம். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

வழுத்துதல்-வணங்குதல். சால-மிகவும். புலை-இழிவு.

39. வாழ்வாங்கு வாழ வேண்டுமா...?

சாவது எளிதுஅரிது சான்றாண்மை நல்லது
மேவல் எளிது அரிது மெய்போற்றல்-ஆவதன்கண்
சேறல் எளிது நிலைஅரிது தெள்ளியராய்
வேறல் எளிது அரிது சொல்.

விளக்கவுரை

உயிரை விட்டுவிடுவது எளிது. ஆனால் கல்வி கேள்வி களில் சிறந்து விளங்கி ஞானம் பெறுவது அரிது இல்லற வாழ்வை அடைதல் சுலபம். ஆனால், அவ்வாழ்வில் ஒழுக்கநெறியுடன் இருப்பது அரிது துறவி ஆகிவிடுவது சுலபம். ஆனால், அதில் தொடர்ந்து நிலைத்திருப்பது கடினம். எதையும் சுலபமாக சொல்லலாம். ஆனால், செயலில் காட்டுவது கடினம் என்று ஏலாதி கூறுகிறது.

உயர்ந்த பொருள்களைப் பெற வேண்டுமானால் விடாமுயற்சியும், நவராக்கியமும் வேண்டும் தியாகமின்றி எந்த உயர்வும் கிடைக்காது. சுகபோகங்களை அனுபவித் துக் கொண்டே இறைக் காட்சியை காணமுடியாது. மிகப் பெரிய உயர்வை பெற வேண்டுமானால் மிகச் சிறியவை அனைத்தையும் விடத்தான் வேண்டும் என்பது பொருளாகும்.

அ.பொ.

சான்றாண்மை–ஞானம். மேவல்–அடைதல். மெய்போற்றல்–உண்மையாக நடத்தல்.

40. ஆகாயத்திற்கும் மேல் உயர

உலையாமை உற்றதற்கு ஓடி உயிரை
அலையாமை ஐயப்படாமை-நிலையாமை
தீர்க்கும்வாய் தேர்ந்து பசிஉண்டி நீக்குவான்
நோக்கும்வாய் விண்ணின் உயர்வு.

விளக்கவுரை

தனக்குண்டான துன்பத்தை போக்கிக் கொள்ள ஓடி அலைந்து வருந்தாமல் இருக்க வேண்டும். வினைகளுக்கு ஏற்ப வரும் மறுபிறவி பற்றி சந்தேகம் கொள்ளக் கூடாது. பிறந்து இறந்து பிறக்கும் நிலையில்லாத வாழ்வை நீக்கும் வழி அறியவேண்டும். பிறகு ஆசை, இச்சை ஆகியவைகளை விட்டொழிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் விண்ணுக்கும் மேலான உயர்வை அடையலாம் என்று ஏலாதி கூறுகிறது.

விண்ணுக்கும் மேலான உயர்வுடைய இடம் என்பது முக்தி ஆகும். ஆத்ம தரிசனம் தான் முக்தி. நாம் உடல் அல்ல... அழியாத ஆத்மா என்பதை அனுபவத்தில் அறிவதே விண்ணுக்கும் மேலான உயர்ந்த இடம்.

அ.பொ.

உலையாமை–வருந்தாமை. உற்றதற்கு–உண்டானதற்கு. அலையாமை–வருந்தாமை. ஐயப்படாமை–சந்தேகப்படாது இருத்தல். தீர்க்கும்வாய்–போக்கும் வழி. தேர்ந்து–ஆராய்ந்து. பசி–ஆசை. உண்டி–இச்சை.

41. இவனுக்கு புத்திமதி அவசியமில்லை

குறுகான் சிறியாரைக் கொள்ளான் புலால் பொய்
மறுகான் பிறர்பொருள் வௌவான்-இறுகானாய்
ஈடற்றவர்க்கு ஈவான் ஆயின் நெறிநூல்கள்
பாடிறப்பப் பன்னும் இடத்து.

விளக்கவுரை

கீழ் மக்களுடன் நெருங்கிப் பழகாமலும், ஊன் உணவு உண்ணாமலும், பொய் பேசாமலும், மற்றவர் பொருளை அடையவிரும்பாமலும், பொருளை இறுக்கிப் பிடிக்கும் கஞ்சத்தனம் இல்லாமலும், முடியாது மெலிந்து தளிர்ந்தவர்க்கு கொடுத்து உதவுதலும் ஆகிய இந்த குணங்களை கொண்டவனுக்கு புத்திமதி யாரும் கூறத் தேவையில்லை. அறிவுரை கூறும் நூல்களும் கூட அவனைப் பொறுத்தவரை பயனற்றவையே ஆகும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

எப்போதும் சத்சங்கம், புலால் உண்ணாமை, பிறர்க்கு உதவும் கொடை குணம், உண்மையே பேசுதல் ஆகிய நற்குணங்கள் முற்பிறவிகளில் செய்த புண்ணியத்தால் வந்தவை. இந்த நற்குணங்களை தொடர்ந்தால் தெய்வகாட்சி கிடைக்கும். முகதி சித்திக்கும். வேறு அறிவுரை தேவையில்லை என்பது பொருளாகும்.

அ.பொ.

குறுகுதல்–நெருங்குதல். மறுகுதல்–கொள்ளுதல். ஈடு–வலிமை. நெறி–வழி. பாடிறப்ப–பயன்பாடு இல்லாதன.

42. இவன் மண்ணுலகு ஆளும் மன்னன்

கொல்லான் உடன்பாடான் கொல்வார் இனம்சேரான்
புல்லான் பிறர்பால் புலால்மயங்கல்-செல்லான்
குடிப்படுத்துக் கூழ்ஈந்தான் கொல்யானை ஏறி
அடிப்படுப்பான் மண்ஆண்டு அரசு.

விளக்கவுரை

தான் ஒரு உயிரைக் கொல்ல மாட்டான். பிறர் உயிர் கொலை செய்வதற்குப் ஒப்புக் கொள்ளமாட்டான். கொலைத் தொழில் புரிவோர் கூட்டத்திலும் சேரமாட்டான். அயலாருடனும் சேரமாட்டான். புலால் உண்ண மாட்டான் தன் குடும்பத்தை நன்கு காப்பாற்றி பிறருக்கு உதவி அளித்து வாழ்வான். இத்தகைய குணங்களைக் கொண்டவன் மற்ற அரசர்களை அடிமை கொண்டு மண்ணாளும் அரசனாக இருப்பான் என்று ஏறாதி கூறுகிறது.

அ.பொ.

புல்லுதல்–இணங்கியிருத்தல். மயங்கல்–உண்ணுதல். செல்லான்–மேற்கொள்ளான். கூழ்–உணவு. கொல்யானை–பகைவரை கொல்லுகின்ற யானை. அடிப்படுப்பான்–அடங்கி நடக்கச் செய்வான்.

43. இவை உயர்வு தரும் ஒழுக்கம்

சூதுஉவவான் பேரான் சுலாவுரையான் யார்திறத்தும்
வாதுஉவவான் மாதரார் சொல்தேறான்–காதுதாழ்
வான்மகர வார்குழையாய் மாதவர்க்கு ஊணிந்தான்
தான் மகரவாய் மாடத்தான்.

விளக்கவுரை

சூதாட்டத்தை விரும்பாமல், நன்னிலையில் இருந்து விலகாமல். மற்றவர்கள் மனம்வருந்தும் சுடுசொற்கள் பேசாமல், யாரிடத்திலும் வம்புசண்டை செய்தலை விரும்பாமல், பெண்கள் பேச்சைக் கேட்டு அதன்படி நடக்காமல் பொன்னால் செய்யப்பட்ட மகர மீன் வடிவுடைய பெரிய காதணிகளை அணிந்து கொண்டிருப்பவனே. பெரிய தவத்தை மேற்கொண்டு ஒழுகுபவர்களுக்கு உணவு அளித்து உபச்சாரம் செய்பவன் முதலை போல வடி

வமைக்கப்பட்ட வாயில் உடைய பெரிய மாளிகையில் வாழும் சிறப்பைப் பெறுவான் என்று ஏலாதி கூறுகிறது.

அ.பொ.

சூது-சூதாட்டம் ஆடுதல். உவவான்-விருப்பப்படமாட்டான். பேரோன்-பெயரான். சுலாவு-சுடுசொல். வாது-வம்பு.

44. பகுத்துண்டு வாழவேண்டும்

பொய்யான் பொய்மேவான் புலால்உண்ணான் யாவரையும்
வையான் வழிசீத்து வாலடிசில்-நையாதே
ஈத்துண்பான் ஆகும் இருங்கடல்சூழ் மண்ணரசாய்ப்
பாத்துண்பான் ஏத்தண்பான் பாடு.

விளக்கவுரை

தான் பொய் சொல்லாமலும், பிறர் சொல்லும் பொய்க்கு உடன்படாமலும், புலால் உண்ணாமலும், எவரையும் கீழ்த்தரமாக பேசாமலும், பலர் நடக்கும் பாதையை செம்மைப்படுத்தி, விருந்தாய் வருபவர்கள் மனம் வருந்தாதபடி நல்ல உணவுதான் உண்டு, பிறருக்கு தந்து பகுத்துண்டு வாழ்பவன். பெரிய சமுத்திரம் சூழ்ந்த இந்த உலகுக்கு மன்னனாகி சீரும் சிறப்புமாக, பலர் பாராட்டும் விதமாக வாழ்வான் என்று ஏலாதி கூறுகிறது.

அ.பொ.

மேவுதல்-பொருந்துதல். வழி-பாதை. சீத்து-சரி செய்து. வால்-தூய அடிசில் உணவு. நையாதே-வருந்தாமல். ஈந்து-கொடுத்து. ஏத்து-புகழ்ச்சி. உண்பான்-இங்கு அடையான் என்று பொருள்.

45. எதிர்ப்பு இன்றி வாழ வழி

இழுக்கான் இயல்நெறி இன்னாத வெஃகான்
வழுக்கான் மனைபொருள் வெளவான்-ஒழுக்கத்தால்
செல்வான் செயிர்இல் ஊண் ஈவான் அரசாண்டு
வெல்வான் விடுப்பான் விரைந்து.

விளக்கவுரை

நல்ல ஒழுக்க நெறிகளில் இருந்து தவறாமலும், பிறருக்கு துன்பம் செய்ய விரும்பாமலும், இல்லற ஒழுக் கங்களில் தவறு செய்யாமலும், இல்லற நெறி காத்து, பிறர் பொருளை விரும்பாமல், அறவழி வாழவேண்டும் குற்றம் இல்லாத உணவை இல்லை என்று வருபவர்க்கும், விருந்தினருக்கும் அளிக்க வேண்டும். இந்த நற்குணங்கள் உடையவன் அரசனாவான். பகைவர்களையும் வெற்றி கொள்வான் என்று ஏலாதி கூறுகிறது.

அ.பொ.

இழுக்கான்–முறை தவறி நடக்கமாட்டான். இயல்நெறி– இவ்வுலகில் வாழும் முறை. வழுக்குதல்–தவறுதல். செசயிர்– குற்றம். விடுப்பான்–நீங்கச் செய்வான். செயிர்இல்–குற்றமில்லாத உணவு என்பது தன் உழைப்பால் பெற்ற வருமானத்தில் ஆக்கிய உணவு என்பது பொருள்.

46. குடி புகழும் கோவேந்தன் யார்?

களியான் கள்உ ண்ணான் களிப்பாரைக் காணான்
ஒளியான் விருந்திற்கு உலையான்–எளியாரை
எள்ளான் ஈத்துஉண்பானேல் ஏதம்இல் மண ஆண்டு
கொள்வான் குடிவாழ்வான் கூர்ந்து.

விளக்கவுரை

ஆவணம் இல்லாதவன், கள் குடிக்காதவன், கள் குடித்து மயங்கும் இடத்திற்கு செல்லாதவன். விருந்தின ரைக் இடத்திற்கு செய்யாதவன். விருந்தினரைக் கண்டு ஓடி ஒளியாமல் அவர் விரும்பியதை மறைக்காதவன். நல் லொழுக்கமுடையவரை ஏழை, எளிய மக்களை இகழ்ந்து பேசாதவன் மற்றவர்க்கு கொடுத்து தானும் உண்பவன் ஆகிய குடிமக்கள் போற்றும் கோவேந்தனாக திகழ்வான் என்று ஏலாதி கூறுகிறது.

அ.பொ.

களி–ஆணவம். ஒளித்தல்–பிறர்க்கு கொடுக்க மனமில்லாமல் மறைத்து வைத்தல். உலைதல்–நீங்குதல். ஏதம்இல்–குற்றம் இல் லாத. குடி–குடிமக்கள் (குடும்பம் என்றும் கூறுவர்). கூர்ந்து–மிகுந்து.

47. சான்றோர் சொல்கேள்

பெரியோர் சொல்பேணிப் பிறழாது நின்று
பரியா அடியார்ப் பறியான்–கரியார்சொல்
தேறான் இயையான் தெளிந்தடிசில் ஈத்துண்பான்
மாறான் மண்ஆளுமாம் மற்று.

விளக்கவுரை

கற்றறிந்த சான்றோர்கள் சொல்வதை கேட்டு நடக்க வேண்டும். அன்புள்ள பணியாளர்களை ஒதுக்கக்கூடாது. வஞ்சகர்கள் சொல்வதை நம்பக்கூடாது அவர்களிடம் நட்பு பாராட்டக்கூடாது. வாழ்வின் பயன் அறிந்து விருந் தோம்பி வாழ்பவன் மண்ணாளும் அரசன் ஆவான். வாழ்வின் பயன் என்பது எவ்வுயிருக்கும் தீமை செய்யா திருத்தல், தீயவர்களுடன் சேராதிருத்தல் என்பதாகும்.

அ.பொ.

பேணி–போற்றி, காத்து. பிறழாது–சிறிதும் விலகாமல். பரிவுடைய–அன்புடைய. அடியார்–பணி செய்வோர் (வேலை யாட்கள் என்றும் கொள்ளலாம்). பறிதல்–நீக்குதல். கரியார்– வஞ்சகர். இயைதல்–சேர்தல்.

48. விருந்தினரோடு சேர்ந்து உண்க

வேற்றரவம் சேரான் விருந்தொளியான் தன்இல்உள்
சோற்றரவம் சொல்லி உண்பான்ஆயின்–மாற்றரவம்
கேளான் கிளைஓம்பின் கேடில் அரசனாய்
வாளால் மண் ஆண்டு வரும்.

விளக்கவுரை

பயனற்ற சொற்களைப் பேசாமல் இருக்க வேண்டும். விருந்தினர்களைக் கண்டு மறையக் கூடாது. தன் வீட்டில் விருந்து நடப்பதை வெளிப்படையாகக் கூறி விருந்தினர் களை அழைத்துப் பரிமாற வேண்டும். எதிரிகள் கூறு வதை ஏற்காமல் உறவினர்களை பாதுகாத்து வந்தால் வாள் வலிமையோடு மண்ணாளும் ஆட்சி பெறலாம் என்று ஏலாதி கூறுகிறது.

அ.பொ.

சோற்றரவம்-விருந்தாரவாரம். மாற்றரவம்-எதிரிகளின் பேச்சு. கிளை-சுற்றம். கேடில்-குற்றமற்ற. வாள்-வாள் வலிமை. அதாவது பகைவர்கள் வெற்றி பெற முடியாத வாள் வலிமை பெற்றிருத்தல் என்பது பொருள்.

49. பிறருக்கு உதவுவதே கொடை

யானை குதிரை பொன்கன்னியே ஆன்நிரையோடு
ஏனை ஒழிந்த இவைஎல்லாம்-ஆன்நெய்யால்
எண்ணன் ஆய்மாதவர்க்கு ஊண்ஈந்தான் வைசிர
வண்ணனாய் வாழ்வான் வகுத்து.

விளக்கவுரை

யானை, குதிரை, தங்கம், கன்னிப் பெண், பசுக்கள் மற்றுமுள்ள தருமம் செய்வதற்கான பொருள்களை யெல்லாம் அவரவர்களுக்குத் தரவேண்டும். மாபெரும் தவசிகளுக்கு பசு நெய்யால் ஆன உணவு படைத்தல் வேண்டும். இத்தகைய தான, தருமம் செய்பவன் குபேரனைப் போல் இவ்வுலகில் சிறப்பாக வாழ்வான் என்று ஏலாதி கூறுகிறது.

அதாவது செல்வ சிறப்பு பெறுவான் என்று தான் ஏலாதி கூறுகிறது. செல்வத்தைத் தாண்டி, புகழைத்

தாண்டி, எல்லாவற்றையும் தாண்டி இறை ஒளியை காண்பதுதான் உயர் லட்சியம். மேலே கூறப்பட்ட குணங்கள் இந்த இறுதி லட்சியத்திற்கு படிக்கட்டுக்ள் என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும்.

அ.பொ.

ஆன்–பசு. நிரை–கூட்டம். எண்ணான்ஆய்–இதன் பயனை நினைப்பவனாய். மாதவர்–உயர்ந்த தவசீலர். வைசிரவண்ணன்–குபேரன். வகுத்து–தனியிடத்தில் வைத்து.

50. இன்பமாக வாழ வழி

எள்ளே பருத்தியே எண்ணெய் உடுத்துஆடை
வள்ளே துணியே இவற்றோடு-கொள்ளென
அன்புற்று அசனம் கொடுத்தான துணையினோடு
இன்புற்று வாழ்வான் இயைந்து.

விளக்கவுரை

எள், பருத்தி நூல், எண்ணெய், உடுத்திக் கொள்ளு வேட்டி, பணம், மேல் துண்டு இவற்றையெல்லாம் தருமம் செய்யவேண்டும். இவைகளை ஏற்றுக் கொள்க என்று தானம் பெறுவோரிடம் அன்போடு கூறி உணவு படைத்தல் வேண்டும். இப்படிச செய்பவன் மனைவி, மக்கள் துணையோடு இன்புற்று வாழ்வான் என்று ஏலாதி கூறுகிறது.

தானம் செய்ய வேண்டும். ஆனால், தானம் பெறுபவர்கள் வடிவில் நிற்பவர்கள் இறைவனே என்ற தெளிவும் வேண்டும். நம் தீவினைகளை அழிக்க இறைவனே தானம் பெறுபவர்களாக வருகிறான். ஆகவே, தன்னை உயர்வாக நினைத்து, தானம் பெறுபவர்களை தாழ்வாக சிறிதும் நினைத்தல் கூடாது என்பதையும் மறக்கக்கூடாது.

அ.பொ.

வள்-செல்வம், (வள் என்பதற்கு தோல் செருப்பு என்றும் பொருள் கொள்ளலாம்). பணம்-தட்சிணை. செருப்பு-தானப் பொருள்களில் ஒன்று. துணி-துணிக்கப்பட்ட துண்டு மேல் போர்வை. அசனம்-உணவு. துணை-மனைவி. இயைந்து-சேர்ந்து.

51. உதவி செய்ய வேண்டியவை

உண்நீர் வளம்குளம் கூவல் வழிப்புரை
தண்ணீரே அம்பலம்தான் பாற்படுத்தான்-பண்நீர
பாடலொடு ஆடல் பயின்றுயர் செல்வனாய்க்
கூடலொடு ஊடல்உளான் கூர்ந்து.

விளக்கவுரை

குடிக்க நல்ல தண்ணீர், குளம், கிணறு, வழிபோக்கர் தங்க குடில்கள், தண்ணீர் பந்தல், அன்ன சத்திரங்கள் இவற்றை வகையாக அமைப்பவன். இசையோடு பொருந்திய பாடலும், ஆடலும் கேட்டும், பார்த்து களிக்கும் செல்வ செழிப்பில் அன்புடைய மனைவியருடன் கூடியும், ஊடியும் இருப்பவன் சிறப்போடு வாழ்வான் என்று ஏலாதி கூறுகிறது.

அ.பொ.

வளம்-செழிப்பு (தட்டுப்பாடு இல்லாமையை குறிப்பது). கூவல்-கிணறு. வழிப்புரை-சாலை ஓரம் அமையும் சிறு குடில். தண்ணீரே-தண்ணீர் பந்தல். அம்பலம்-பொது இடம் (மண்டபம் அல்லது சத்திரம் என்பது பொருள்). பாற்படுத்தல்-வகையாக அமைத்தல்.

52. இவர்தான் உதவக் கூடியவர்

இல்இழந்தார் கண்இழந்தார் ஈண்டிய செல்வம் இழந்தார்
நெல்இழந்தார் ஆன்நிரை தான்இழந்தார்க்கு-எல்உழந்து
பண்ணிய ஊண் ஈய்ந்தவர் பல்யானை மன்னராய்
எண்ணி ஊண் ஆர்வார் இயைந்து.

விளக்கவுரை

வீடு இழந்து தவிப்பவர்களுக்கும், கண் இழந்து துன்பப்படுகிறவர்களுக்கும், தேடிய செல்வத்தை இழந்து வாடுபவர்களுக்கும், வெள்ளாமை, பாழாக வருந்துகிற வர்களுக்கும், பால் தரும் பசுக் கூட்டஙகளை இழந்து கவலைப்படுபவர்களுக்கும், இரவு பகல் என்று பாராமல் பாடுபட்டு பணம் சம்பாதித்து ஆக்கிய உணவை உண்ணக் கொடுப்பவர் மனை, மக்கள், சுற்றமொடு, யானைப் படை மன்னராய் பலராலும் மதிக்கப்படுவர். வயிற்றை அறுசுவை உணவுண்டு வாழும் மேலான நிலை பெறுவர் என்று ஏலாதி கூறுகிறது.

அ.பொ.

ஈண்டிய-தேடிய நெல் இழந்தார் என்பதற்கு விளைந்த வெள்ளாமையை இழந்தவர் என்று பொருள். ஆன்நிரை-பசுக் கூட்டம். எள்-என்பதற்கு இரவு, பகல் என இருபொருள் உண்டு. உழுந்து-உழைத்து. பண்ணிய-செய்த.

53. இவர்களுக்கும் உதவுக

கடம்பட்டார் காப்புஇல்லார் கைத்துஇல்லார் தம்கால்
முடம்பட்டார் மூத்தார் மூப்புஇல்லார்க்கு-உடம்பட்டு
உடையராய் இல்உள் ஊண்ஈத்து உண்பார் மண்மேல்
படையராய் வாழ்வார் பயின்று.

விளக்கவுரை

கடன்பட்டு வாழ இயலாது கவலைப்படுபவர்களுக் கும். பாதுகாப்பு துணை இல்லாதவர்களுக்கும், கையிருப் பாக பொருள் இல்லாதவர்களுக்கும் கால் இழந்து முடம் ஆனவர்களுக்கும், வயோதிகம் அடைந்து விட்டவர் களுக்கும், பெரியோர் அல்லது பெற்றவர்கள் துணை இல்லாதவர்களுக்கும் உள்ளன்போடு வீட்டுக்கு அழைத்து உணவு படைத்து, தானும் உண்பவர்கள் மண்ணுலகில்

நால்வகை சேனையுடைய அரசர்களாக மனைவி, மக்க ளுடன் மகிழ்வோடு வாழ்வார்கள்.

அ.பொ.

கடம்-கடன். காப்பு-காவல் வைத்து. கைத்து-செல்வம். மூத்தார்-முதியவர். மூப்பு இல்லாதார்-வயதில் மூத்த பெரியோர்கள் துணை இல்லாதவர். உடம்பட்டு-மனம் ஒப்பி. உடையவராய்-அன் புடைமை பூண்டு. இல்உள்-வீட்டில் படையராய் (தேர், யானை, குதிரை, காலாள் என்னும்) நால்வகை படை உடைய அரசராய்.

54. பயன் கருதாமல் உதவுக

பார்ப்பார் பசித்தார் தவசிகள் பாலர்கள்
கார்ப்பார் தமையாதும் காப்பிலார்-தூப்பால்
நிண்டாரால் எண்ணாது நீத்தவர் மண்ஆண்டு
பண்டாரம் பற்ற வாழ்வார்.

விளக்கவுரை

மறையவர்கள் (பார்ப்பவர்) பசித் துன்பத்திற்கு ஆளானவர்கள், தவசீலர்கள், குழந்தைகள், பிறரால் வெறுத்து ஒதுக்கப்பட்டவர்களைத் தம்மை எந்த வகை யிலும் காத்துக்கொள்ள ஆதரவு சிறிதும் இல்லாதவர்கள், ஒழுக்கநெறி நிற்பவர்களுக்கும் பயன் கருதாது உதவி செய்து அவர்களுடைய துன்பத்தை துடைத்தவர்கள் மண்ணுலகை செல்வ செழிப்புடன் ஆண்டு மகிழ்வோடு வாழ்வர் என்று ஏலாதி கூறுகிறது.

அ.பொ.

துப்பால நீண்டார்-தூயநல் ஒழுக்கநெறியில் மிக்கு உயர்ந் தவர் நீண்டார் என்பது நிண்டார் என்று குறுகியது. ஆல்-அசை. எண்ணாது-பயன் கருதாது. நீத்தார்-துன்பம் நீக்கியவர். பண்டாரம்-செல்வக் குவியல். பற்ற-நிறைந்திருக்க.

55. உயிர் பிறந்தது எதற்காக?

ஈன்றார் ஈன்கால் தளவார் சூலார்குழவிகள்
மான்றார் வளியால் மயங்கினார்க்கு- ஆனார்என்று
ஊண்ஈய்த்து உறுநோய் களைந்தார் பெரும்செல்வம்
காணியத்து வாழ்வார் கலந்து.

விளக்கவுரை

பிள்ளை பெற்றவர்களுக்கும், பிள்ளை பெறுங் காலத்தில் உடல் தளர்வோருக்கும் உதவி செய்தல் வேண் டும். கருவுற்றிருக்கின்ற பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் உதவவேண்டும். அறிவு மயங்கியிருப்பார்கள் வாத நோய்க்கு ஆளானவர்களையும் காக்கவேண்டும். உணவு தரவேண்டும். இத்தகைய நற்குணங்களையுடையவர்கள் உறவோடு கூடி மகிழ்வோடு வாழ்வார்கள். திக்கற்றவர் களுக்கு உதவி செய்பவர்கள் தீவினைகள் அழிந்து தெய்வ நிலையை நோக்கி முன்னேறிச் செல்வார்கள் என்பதை யும் நினைவில் கொள்ள வேண்டும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

ஈன்றார்-பிள்ளைப் பெற்றவர்கள். தளர்வார்-தளர்ச்சியடை பவர்கள். குழவிகள்-குழந்தைகள். மான்றார் வளியால்-அறிவு மயங்கிய. உறுநோய்-நோயுள்ளவர்கள். களைந்து-நீக்கி. பெரும் செல்வம்-திரண்ட ஐஸ்வர்யம். வாழ்வார்க கலந்து-உறவுடன் கூடி மகிழ்ந்து.

56. வாடும் வயிற்றுக்கு சோறிடுக

தளையாளர் தாப்பாளர் தாழ்ந்தவர் பெண்டீர்
உளையாளர் ஊண் ஒன்றும்இல்லார் கிளைஞராய்
மாஅலந்த நோக்கினாய் ஊண்ஈயந்தார் மாக்கடல்சூழ்
நாவலந்தீவு ஆள்வரே நன்கு.

விளக்கவுரை

குற்றம் செய்வதற்கு தண்டனையாக காலில் விலங்கு பூட்டப்பட்டவர்க்கும், குற்றம் செய்தற்காகத் தாக்கப்பட்டு தண்டிக்கப்பட்டுள்ளவர்க்கும், உயர்ந்த நிலையிலிருந்து இருந்து தாழ்ந்தவர்களுக்கும், பெண்களுக்கு வறுமை, நோய் முதலியவற்றால் துன்பம் அடைந்தவர்க்கு உண்ண ஒரு கவளம் சோறு இல்லாதவர்க்கும் உணவு கொடுத்து உதவ வேண்டும். மாவடு பிளந்ததுபோல் கண்களை உடையப் பெண்ணே. அத்தகைய நற்குணமுள்ளவர்கள பெரிய கடல் சூழ்ந்த நாவலத் தீவுக்கே அரசராகி நன்கு ஆட்சி செய்வர் என்று ஏலாதி கூறுகிறது.

அ.பொ.

தளை–கால்தடை. தாப்பு–தாக்குதல். தாப்பாளர்–தண்டிக்கப் பட்டவர். உளையாளர்–வருந்துவோர். மா–மாவடு. வலந்த–பிளந்து. மாவலந்த என்பதற்கு மான்கள் மயங்கும் பார்வையுடைய என்றும் பொருள் கூறுவர். நாவலந்தீவு–ஏழு தீவுகளில் ஒன்று. (நம் நாட்டில் பழமையான பெயர் இது).

57. துயரடைந்தோர் துயரை துடைத்திடுக

கருஞ்சிரங்கு வெண்தொழுநோய் கல்வளி காயும்
பெருஞ்சிரங்கு போவயிற்றுத் தீயார்க்கு அருஞ்சிரமம்
ஆற்றி ஊணஈத்து அவைதீர்த்தார் அரசராய்ப்
போற்றி ஊணஉண்பார் புரந்து.

விளக்கவுரை

கொடிய சிரங்கும், வெண் குட்டமும், கல்லடைப்பும், வாதமும், வருத்தும் கழலையும், பெரிய வயிற்றெரிச்சலும் போன்ற துயரத்திற்கு ஆளாகி தவிப்பவர்களுக்கு உணவு தந்து அவர்களின் கொடிய துன்பத்தைத் தீர்ப்பவர்கள் அரசராய நாடாண்டு பலரும் போற்ற வாழ்வார்கள் என்று ஏலாதி கூறுகிறது.

எளியவர்க்கு உதவி செய்பவர்கள் அரசராக ஆள்வார்கள் என்று திரும்ப, திரும்ப ஏலாதி கூறுகிறது. அப்படி யென்றால் இதுவரை அரசாண்ட மன்னர்கள் எல்லாம் பிறருக்கு செய்த உதவிகளின் புண்ணியத்தால் அரசராக ஆனார்கள் என்பது அறியப்படுகிறது. இந்த நிலைக்கும் மேலாக நாம் சென்றாக வேண்டும். பதவிகளைக் காட்டிலும் நம் தெய்வத் தன்மையை அறிவதுதான் மிக உயர்ந்த பதவி என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

அ.பொ.

வளி–வாதநோய். காயும்–வருந்தும். பெருஞ்சிரங்கு–கழலை (கழுத்தில் வரும் கட்டி). வயிற்றுத் தீ–குன்மம். அருஞ்சிரமம்–பெருந் துன்பம். ஆற்றி–மாற்றி.

58. சிற்றினம் சேரக்கூடாது

காம்ஆடார் காமியார் கல்லார் இனம்சேரார்
ஆம்ஆடார் ஆய்ந்தார் நெறிநின்று தாம்ஆடாது
ஏற்றாரை இன்புற ஈய்ந்தார் முன்இம்மையான்
மாற்றாரை மாற்றி வாழ்வார்.

விளக்கவுரை

முன்பிறவியில் காமஇச்சையில் ஈடுபடாமலும், பிறர் பொருள் மீது ஆசை வைக்காமலும், கல்வியறிவில்லாத மூடரோடு சேராமலும், நீர் விளையாடாமலும், கற்றறிந்த பெரியோர் ஆராய்ந்து அறிந்து ஆராய்ந்து சொன்ன நெறிமுறைகளை தவறாமல் மேற்கொள்ள வேண்டும். யாசிப்பவர்களுக்கு உதவவேண்டும். இப்படியெல்லாம் செய்தவர்கள் தான் இப்பிறவியில் பாராளும் மன்னராக முடியும் என்று ஏலாதி கூறுகிறது.

அரசனாவதற்கு நற்குணங்கள் தேவை யென்று திரும்ப, திரும்ப சொல்லப்படுகிறது. அரசன் என்பது ஒரு

பதவி. இது கிடைத்தால் நம் லட்சியம் பூர்த்தி அடையாது. அரசனும் மாறத்தான் வேண்டும். இதையும் தாண்டிச் செல்ல வேண்டும். அரசனாவதெல்லாம் வெறும் படிகள் மரணத்தை வென்று தெய்வத்தின் வடிவைப் பெறவேண் டும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

காம்–காமம். பெண் இச்சை. காமி–ஆசைப்படுபவன். ஆம்–நீர். தாம்ஆடாது–தாம் தவறாது நடந்து. ஏற்றாரை–ஏற்க இரந்து வரும் வறியோரை.

59. நல்லறம் காத்திடுக

வணங்கி வழிஒழுகி மாண்டார் சொற்கொண்டு
நுணங்கிய நூல்நோக்கு நுழையா–இணங்கிய
பால்நோக்கி வாழ்வான் பழிஇல்லா மன்னனாய்
நூல்நோக்கி வாழ்வான் நுனித்து.

விளக்கவுரை

பணிவோடு நல்ல வழியில் நடத்த வேண்டும். அறிவில் சிறந்த பெரியோர்களின் அறிவுரைகளை கேட்டு நடத்தல் வேண்டும். நுட்பமான அற்ற நூல்களில் உள்ள கருத்துக்களை அறிதல் வேண்டும். அறிந்ததை செயலில் கொண்டு வரவேண்டும். பிறர் பழி கூறல் முடியாதபடி இவ்வாறு வாழ்பவன் புகழுடன் அரசாள்வான் என்று ஏலாதி கூறுகிறது.

அரசன்... புகழ்... செல்வாக்கு என்பதெல்லாம் வெறும்படிகள் தான் இவற்றையெல்லாம் நாம் தாண்டிச் செல்ல வேண்டும். இப்பிறவியிலேயே இதை தெரிந்து கொள்ளவிடில் நஷ்டம் மனித சமுதாயத்திற்குதான். அரசன் என்பது ஒரு பதவி. நல்ல செயல்களைச் செய்து அரசன் ஆகலாம். அதையும் தாண்டி மகானாக வேண்டும்.

அதற்காகவே ஏலாதி முதலில் படிகளைப் பற்ற விவரிக் கிறது என்பதை அறிய வேண்டும்.

அ.பொ.

வணங்கி-வணக்கத்துடன். ஒழுகி-நடந்து. மாண்டார்-அறிவில் சிறந்தோர். நுணங்கிய-நுட்பமான. நூல்-அறிவு நூல். நோக்கி-ஆராய்ந்து. இணங்கிய-ஏற்ற.

60. பழிபாவம் காத்து வாழவேண்டும்

பெருமை புகழ்அறம் பேணாமை சீற்றம்
அருமை நூல்சால்பு இல்லார் சாரின்-இருமைக்கும்
பாவம் பழிபகை சாக்காடே கேடுஅச்சம்
சாபம்போல் சாரும் சலித்து.

விளக்கவுரை

பெருமை, புகழ், அறச்சிந்தனையும் செயல், கோபத்தை விரும்பாமை, அரிய நூல் அறிவு, பெருந் தன்மை இவை இல்லாதவர்களைச் சேர்ந்தால் இம்மை, மறுமை என இரண்டிலும் பாவம், பழி, பகை, சாக்காடு, கேடு, அச்சம் எல்லாம் நல்லவர் இட்ட சாபம் போலத் தேடி வந்து சேரும் என்று ஏலாதி கூறுகிறது.

தீயவர்களுடன் சேர்ந்தால் துன்பம் வரும். சத்சங்கத் துடன் சேர்ந்தால் மனித லட்சியம் ஈடேறும். மனித லட்சியம் என்பது மனிதன் சாகும் உடல் அல்ல. மரண மில்லா ஆத்மா என்பதை அறிந்து அதனை அடைவ தாகும். அதுவே நிலையான பேரானந்தம். தீயவர்களுடன் சேர்ந்தால் வறுமை, பழி, நோய், மரணம் தான். இச் சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

சால்பு-பெருந்தன்மை. சாரின்-சேர்ந்தால். பாவம்-தீவினை. பழி-ஏளனம். பகை-விரோதம். சாக்காடு-மரணம். கேடு-அழிவு. அச்சம்-பயம். சாபம்-கோபம் கொண்டு கூறும் மொழி.

61. உயிருக்கு ஊனம் விளைப்பவை

ஆர்வமே செற்றம் கதமே அறையுங்கால்
ஓர்வமே செய்யும் உலோபமே-சீர்சாலா
மானமே மாயஉயிர்க்கு ஊனமே என்னுமே
ஊனமே தீர்த்தவர் ஒத்து.

விளக்கவுரை

ஆசையும், பகையும், கோபம், ஒருபக்கம் சார்தலும், கஞ்சத்தனமும், பெருமை பொருந்தாத மானமும் என்னும் இந்த ஆறும் பிறந்தும், இறந்தும் பின் பிறக்கும் நிலையற்ற மாய உயிருடன் கூடிய மனிதர்களுக்கு கேடு பயப்பனவாகும் குறை கூற முடியாத சான்றோர்களின் அறிவு நூல்கள் கூறுவது இது என்று ஏலாதி கூறுகிறது.

குறை கூற முடியாத சான்றோர்கள் கூறுவது என்ன? தீயகுணங்கள் கூடாது. நல்ல செயல்களை செய். இதனால் சாத்வீக குணம் உண்டாகும். இந்த குணம்தான் இறைவனை நோக்கி அழைத்துச் செல்லும். இறைவனை வெளியே தேடாதே. உனக்குள்ளே குடியிருக்கும் இறைவனை தூய்மையடைந்து தியானம் செய். பயிற்சி செய். குண்டலினியை எழுப்பு இதுவே சான்றோர்களின் அறிவு நூல்கள் கூறுபவை. உயிருக்கு ஊனம் விளைவிக்காத உத்தம கருத்து இதுவே. இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடலே அமைந்துள்ளது.

அ.பொ.

சீர்சாலா–பெருமை இல்லாத. ஊனமே–கேடாகும். ஊனமே–குறையே. தீர்த்தவர்–நீங்கியவர். ஒத்து–அறிவு நூல்கள்.

62. இழிவு இழிவானவை

கூத்தும் விழவு மணமும் கொலைக்களமும்
ஆர்த்த முனைஉள்ளும் வேறிடத்தும்-ஒத்தும்
ஒழுக்கும் உடையவர் செல்லாரே செல்லின்
இழுக்கும் இழவும் தரும்.

விளக்கவுரை

கூத்தாடும் இடம், விழா, வேடிக்கை நடக்கும் இடம், திருமண நிகழ்ச்சி நடைபெறும் இடம், போர்க் களம் மற்றும் இதுபோல உள்ள வேறு இடங்களுக்கு கல்வி அறிவும். அதற்குரிய நல்லொழுக்கமும் உடைய சான்றோர்கள் ஒரு காலத்தும் செல்லமாட்டார்கள். அப்படி சென்றால் அது அவர்களுக்கு இழிவைத் தரும் என்று ஏலாதி கூறுகிறது.

திருமணம் என்பது இல்லற தர்மம். அந்த நிகழ்வு களுக்கு பெரியோர் சென்று வாழ்த்து கூறிவருவது இயல் பானது. ஆனால், ஏலாதி அவ்விடமும் செல்லக்கூடாத இடம் என்று கூறுகிறது. துறவிகள் செல்லக்கூடாது என்ற அர்த்தத்தில் சொல்லப்பட்டிருக்கலாம்.

அ.பொ.

கூத்து-நாடகம். விழா-திருவிழா. மணம்-திருமணம். கொலைக்களம்-உயிர்க் கொலை நடக்கும் இடம். ஆர்த்த-ஆரவாரமுடைய. முனை-போர்க்களம். ஒத்தும் ஒழுக்கும்-கல்வி, அறிவும் நல்லொழுக்கமும்.

63. பீடுடைய வாழ்வு பெற

ஊணொடு கூறை எழுத்தாணி புத்தகம்
பேணொடும் எண்ணும் எழுத்திவை-மாணொடு
கேட்டெழுதி ஓதிவாழ்வார்க்கு ஈய்ந்தார் இம்மையான்
வேட்டெழுத வாழ்வார் விரிந்து.

விளக்கவுரை

உணவும், உடையும், எழுத்தாணியும், சுவடியும், பெரு விருப்பத்துடன் கணக்கும், இலக்கணமும் மாணவர்களுக்கு உரியது. நற்குணப் பொருந்த ஆசிரியர் சொல்வதைக் கேட்டு, ஏட்டில் எழுதியும், எழுதியதைப் படித்தும் வாழ்பவர்களுக்கு முற்பிறப்பில் உதவியவர்களே

இப்பிறப்பில் தம் புகழை புலவர்கள் எழுதும் வகையில் வாழ்கின்றார் என்று ஏலாதி கூறுகிறது.

முற்பிறப்பின் தொடர்ச்சியே இப்பிறப்பில் நமக்கு உதவியாக வருகிறது. அது கல்வி உதவியாக இருந்தாலும் சரி... ஆன்மிக உதவியாக இருந்தாலும் சரி. முற்பிறப்பு செயல்களே இப்பிறப்புக்கு உதவி செய்கின்றன. இப்பிறப்பில் செய்யும் செயல்கள் வரப் போகிற பிறவிக்கு படிகள் ஆகின்றன என்பது பொருளாகும்.

அ.பொ.

ஊண்-உணவு. கூறை-உடை. எழுத்தாணி-(பழங்காலத்தில் பனை ஓலையில் எழுத பயன்படுத்தப்பட்ட நீண்ட ஆணி போல் உள்ள எழுதுகோல்). புத்தகம்-இங்கே சுவடி என்று பொருள்.

64. எது தவம்?

உயர்ந்தான் தலைவன் என்று ஒப்புடைத்தால் நோக்கி
உயர்ந்தான் நூல்ஓதி ஒடுங்கி-உயர்ந்தான்
அருந்தவம் ஆற்றச்செயின் வீடுஆம் என்றார்
பெருந்தவம் செய்தார் பெரிது.

விளக்கவுரை

எல்லா வகையான நற்குணங்களாலும் உயர்ந்து நிற்கும் ஒருவன் தான் தலைவன். அத்தலைவன் இறைவன் அருளிய வேதங்களை ஓதி, மனம் ஆசையின் வசப்படாது அடங்கி ஒடுங்க இறைவனை நினைத்து தவம் செய்ய முன்றால் அவன் வீடு, பேறு அடைவான் என்று அப்பெரும் தவத்தைச் செய்த சான்றோர்கள் கூறி உள்ளனர். ஆசையை அடக்கி, மனத்தை அடக்கி தவம் செய்வது தான் உண்மையான தவம். இந்த தவம் தான் இறைகாட்சியை காட்டுகிறது. இறைவன் நமக்குள்ளேயே இருக்கிறார். ஆசை போன்ற அழுக்குகள் அவை மறைக்கின்றன. தவம் அழுக்கை வெளியேற்றுகிறது. காட்சி

அப்போது வருகிறது. இதுவே ஆசியம். இச்சிந்தனை களைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

ஒப்புடைத்தால்–தக்க முறையில். நோக்கி–நினைத்துப்பார்த்து. உயர்ந்தான் நூல்–மறைபொருள். ஓதி–துதித்து. ஒடுங்கி–மனம் அடங்கி. வீடு–முக்திப் பேறு.

65. எது சுகம்?

காலனார் ஈடுஅறுத்தல் காண்குறின் முற்றுணர்ந்த
பாலனார் நூல்அமர்ந்து பாராது-வாலிதா
ஊறபாடில்லா உயர்தவம் தான்புரியின்
ஏறுமோ மேல்உலகம் ஓர்ந்து.

விளக்கவுரை

எமனின் ஆற்றலை அழிக்கும்வழி தவம்தான். முற்றுணர்ந்த தலைவன் அருளி யமறைபொருளை (வேதப் பொருளை) விருப்பத்துடன் கற்க வேண்டும் பசி, வருத்தம் பாராமல், தடை, தளர்வுகளை நீக்கி தவம் செய்தால் மரணம் வெல்லப்படும். வீடு, பேறு கிடைக்கும் என்று ஏலாதி கூறுகிறது.

மறைபொருள் கூறுவது என்ன? தத்ஸத். அதாவது நீயே அது. நீயே அதுவாக இருக்கிறாய். நீ அழியாத ஆத்ம ஜோதி. இறைவனின் பிள்ளை நீ. அப்படியிருக்க உள்ள எப்படி மரணம் வெற்றி கொள்ள முடியும்? எல்லா தடைகளையும் தகர்த்து எறிந்து தவம் செய். தானாக அனைத்தும் விளங்கும் என்பதே வேதம் கூறும் வழி.

அ.பொ.

காலன்–எமதூதன். ஈட–வலிமை. அறுத்தல்–அழித்தல். பால்–இயல்பு.நூல்–மறை. அமர்ந்து–கற்று.

66. சொல்லறியாச் சுகம் தவம்

பொய்தீர் புலவர் பொருள் புரிந்து ஆராய்ந்த
மைதீர் உயர்கதியின் மாண்புரைப்பின்-மைதீர்
சுடர்இன்று சொல்இன்று மாறின்று சோர்வின்று
இடர்இன்று இனிதுயிலும் இன்று.

விளக்கவுரை

பொய்மை விட்டொழித்த புலமையில் சிறந்த ஞானிகள் மெய்ப் பொருளை விரும்பி ஆராய்ந்து அறிந்து சொல்லிய வீட்டின்பம் பற்றி அறிக. அங்கு இருள் நீங்கும் சூரியன் இல்லை. அங்கே எதுவும் மாறுவது இல்லை. மனச் சோர்வு இல்லை. துன்பம் இல்லை. இனிய தூக்கமும் இல்லை. இரவு பகலில்லா இன்ப உலகம் பேரின்ப வீடு இதையே தூங்காமல் தூங்கி சுகம் பெறுவது என்று சித்தர்கள் சொல்லியிருக்கிறார்கள் மற்றவர்கள் அந்த சுகத்தை அறிந்தார்கள் என்பது செய்தி. அந்த சுகத்தை நாமே அடையவேண்டும். அதுவே நமக்கு நன்மை முயற்சியும், பயிற்சியும் இல்லாமல் எதுவும் நடைபெறாது என்பதை மனதில் பதிய வையுங்கள். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

மைதீர்கதி–குறையில்லாத வீட்டின்ப நிலை. மாண்பு–சிறப்பு. மைதீர்–இருளைப் போக்கும். சுடர்–சூரியன். மாறின்று–மாறுதல் இல்லை. சோர்வு–தளர்வு.

67. இழி-குழிகள் ஏழு

கூர்அம்பு வெம்மணல் ஈர்மணி தூங்கலும்
ஈரும்புகை இருளோடு இருள்நூல்-ஆராய்ந்து
அழிகதி இம்முறையான் ஆன்றார் அறைந்தார்
இழிகதி இம்முறையான் ஏழு.

விளக்கவுரை

கூர்மையான அம்பு எய்யும் இடம், வெப்பம் மிகுந்த மணல் பரப்பு, குளிர்ந்த மணிகள் உருளும் இடம் தூக்கம் வருவதைப் போல மயக்கம் உண்டாகும். இடம், வருத்து கின்ற புகை, மூட்டம், இருள் போல ஒளி மயங்கிய இடம், காரிருள் சூழ்ந்த இடம் என்று இந்த ஏழு இடங்களையும் குற்றம் இழைத்த உயிர்கள் விழும். ஏழு தீக்குழிகள் ஆகும். இக்குழிகளில் விழாத சான்றோர்கள் கூறியவை இது என்று ஏலாதி கூறுகிறது.

அ.பொ.

வெம்மணல்–சுடுமணல். ஈர்–குளிர்ந்த. ஈரும்–வருத்தும். இருளோடு–இருள் மங்கிய. இருள்–காரிருள். அழிகதி–அழிவதற்கான வழி. அறைந்தார்–கூறினார்.

68. அன்புக்கு அடையாளம் ஆறு

சாதல் பொருள்கொடுத்தல் இன்சொல் புணர்வுவத்தல்
நோதல் பிரிவில் கவறலே–ஓதலின்
அன்புடையார்க்கு உள்ளன ஆறுகுணமாக
மென்புடையார் வைத்தார் விரித்து.

விளக்கவுரை

உயர்ந்த நட்புக்கு அடையாளம் கூறும் பாடல் இது. நண்பர்கள் இறந்தால் தானும் இறந்து விடவேண்டும் நண்பனை பிரிந்து உயிர் வாழ ஆசைப்படக் கூடாது. நண்பனுக்கு துன்பம் வந்தால் பொருள் கொடுத்து உதவ வேண்டும். நண்பன் கவலையோடு இருந்தால் இன்மொழி பேசி மாற்றவேண்டும். பிரிதல் கூடாது. துன்பத்தில் பங்கு கொள்ளவேண்டும். பிரிய நேர்ந்தால் கலங்க வேண்டும். உண்மை நட்புக்கு இதுவே அடையாளங்கள் என்று சான்றோர்கள் கூறியுள்ளனர்.

அ.பொ.

புணர்வு உவத்தல்–சேர்ந்திருக்க விரும்புதல். நோதல்–வருந்துதல். கவறல்–கலங்குதல். ஓதலின்–சொல்லி உள்ளதால். மென்புடையார்–மென்மையானவர். வைத்தார்–நூலில் கூறி வைத்தார். விரித்து–விரிவாக.

69. உடம்பின் தொழில் ஆறு

எடுத்தல் முடக்கல் நிமிர்த்தல் நிலையே
படுத்தலோடு ஆடல் பகரின்–அடுத்துயிர்
ஆறுதொழில் என்று அறைந்தார் உயர்ந்தவர்
வேறு தொழிலாய் விரித்து.

விளக்கவுரை

எழுதுதல், முடங்குதல், நிமிர்தல், நிற்றல், படுத்தல், ஆடுதல் என்னும் இவையே உயிர் எடுத்த உடம்பின் ஆறு தொழில்களாகச் சொல்லத்தகும். பெரியோர்கள் இதனை வேறு, வேறு தொழிலானகவும் இதனை விரித்து கூறியுள்ளார்.

அ.பொ.

பகரின்–சொல்லுமிடத்து. இவை உடலின் தொழில்கள்.

70. இனிமையான வாழ ஆறு வழிகள்

ஐயமே பிச்சை அருந்தவர்க்கு ஊண் ஆடை
ஐயமேஇன்றி அறிந்து ஈந்தான்–வையமும்
வானும் வரிசையால்தான் ஆளும் நாளுமே
ஈனமே இன்றி இனிது.

விளக்கவுரை

இல்லை என்று வருவோர்க்கு தரும் சோறும். துறவிகளுக்கு பிச்சையும், அரியமுயற்சிகளில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு உணவு, உடை இவற்றை சந்தேகப்படாமல் அவ

ரவர் குணமறிந்து கொடுத்து உதவுபவன் விண்ணையும், மண்ணையும் சிறப்போடு ஆளும் அரசனாக ஆவான் என்று ஏலாதி கூறுகிறது.

அ.பொ.

ஐயம்-சோறு. பிச்சை-துறவியர் முதலானவர்களுக்கு இடுவது பிச்சை. ஐயம்-ஐயுறல். வரிசை-சிறப்பு.

71. உணவிட்டு உதவுக

நடப்பார்க்கு ஊண்நல்ல பொறைதாங்கினார்க்கு ஊண
கிடப்பார்க்கு ஊண கேளிர்க்கு ஊண்கேடின்று-உடல்சார்ந்த
வானகத்தார்க்கு ஊணே மறுதலையார்க்கு ஊண்அமைத்தான்
தான் அகத்தே வாழ்வான் தக.

விளக்கவுரை

வழிநடந்து இளைத்தவர்க்கும், சுமை தூக்கிக் களைத்தவர்க்கும், நோய் படுக்கையில் கிடப்பவர்க்கும், உறவினர்க்கும், உடல் சார்ந்த அதாவது இரத்த உறவுடைய-வானாடு அடைந்த தென்புலத்தார்க்கும், வேறானவர்க்கும், வேறு நாட்டவர்க்கும் குறைவுபடாத உணவு கிடைக்கச் செய்தவன் தன் வீட்டில் எந்த குறையுமின்றி சிறப்போடு வாழ்வான் என்று ஏலாதி கூறுகிறது.

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் ஆவார். உயிரை காப்பாற்றுதல் என்பது இறைவன் படைத்த உயிரை காப்பாற்றுதல் எனப்படும். ஆகவே, அவனுக்கு இறையருள் கிட்டும் எப்போதும் குறைவின்றி வாழ்வான் என்பது பொருளாகும்.

அ.பொ.

நடப்பார்-வழிபோக்கர். நல்ல பொறை-பெரிய சுமை. கேளிர்-உறவினர். கேடின்றி-கேடுறாமல். வானகத்தார்-தென் புலத்தார்.

மறுதலையார்-வேறிடத்தார். அமைத்தல்-கிடைக்கச் செய்தல். ஊண்-உணவு.

72. கல்லாமை குற்றம்

உணராமையால் குற்றம் ஓத்தான் வினையாம்
உணரான் வினைபிறப்புச் செய்யும்-உணராத
தொண்டு இரும்துன்பம் தொடரும் பிறப்பினால்
மண்டிலமும் ஆகும் மதி.

விளக்கவுரை

அறிவு நூல் கற்காவிட்டால் அறியாமையால் குற்றம் உண்டாகும். கற்காதவன் செய்யும் தீயசெயல்கள் தீமைக்கு இடமாகும். பாவம் பெருகும். பிறவிக்கு அது மூலமாகும். பிறந்து, பிறந்து இறக்கும் பிறவி தொடர்வதற்கு காரணம் தீவினையே. எனவே, இதைப் போக்கவேண்டும் என்று ஏலாதி கூறுகிறது. தீவினை முதலில் ஏன் தோன்றியது? என்பதற்கு சரியான விளக்கம் கிடைக்கவில்லை. ஆயினும் சான்றோர்கள் கூறிய வழியில் நடப்பதே விவேகம். ஞான நூல்களை கற்று தவம் இயற்றி பிறவி நோயை வேரறுப் போம். இச்சிந்தனைகளைத் தூண்டும்விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

ஓத்தான்-நூலறிவால். தொண்டு-ஒன்பது. இருந்துன்பம்-பெருந்துன்பம். மண்டிலம்-வட்டமாக சுற்றுவது. மதி-இதனைக் கருத்தில் கொண்டு நடப்பாயாக. ஒன்பது துன்பங்கள், உயிரும் உயிரில்லாதனவும் பாவம், புண்ணியம், முதிர்ப்பு வீடு என ஒரு பட்டியலும், பொருளகராதிகளில் அஞர் அரந்தை, இடம், இடுக்கண், இடும்பை, சிறுமை, துக்கம் என இருபதுக்கும் மேற்பட்டவையும் கூறப்பட்டுள்ளன.

73. இல்லறமும் இனிய தவமாகும்

மனைவாழ்க்கை மாதவம் என்று இரண்டு மாண்ட
வினைவாழ்க்கை ஆகவிழைப-மனைவாழ்க்கை
பற்றுதல்இனறி விடுதல்முற் சொல்லுமேல்
பற்றுதல் பாத்தில் தவம்.

விளக்கவுரை

இல்லறத்தில் இருந்து மனை அறம் காத்து வாழ்தல், மிக உயர்ந்த தவநெறியில் தங்குதல் என இரண்டு நிலைகள் உண்டு. இந்த இரண்டுமே மிக சிறந்தது என்று அறிஞர்கள் கருதுவார்கள். எனினும் இவ்விரண்டில் மனை வாழ்க்கை என்னும் இல்லறம் இவ்வுலகப் பொருள்கள் மீது பற்றுடையவராக வாழ்தல் ஆகும். நீங்காத தவஒழுக்கம் என்பது அந்த ஆசைகள் பற்றாதபடி பற்றற்று இருப்பது. வீடு பேறு அளிக்கும் தவத்தையே பற்றியிருப்பது ஆகும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது. உலக ஆசைகள் நம்மிடம் இருக்கும் வரை அழியாத வீடு பேற்றை அடைய முடியாது. தியாக மின்றி எந்த விடுதலையும் கிடைக்காது. அழியும் பொருட்கள் மீதுள்ள ஆசையை ஒழித்தால்தான் அழியா பேரின்ப வீட்டைப் பெறமுடியும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

மாண்ட–மிக உயர்ந்த. வினை–மேற்கொள்ளத்தகக். விழைப–விரும்புவர். பற்று–ஆசை. முற்சொல்லுமேல்–முன்னர் கூறப்பட்டதான. பாத்தில்–பரந்து. இல்–நீங்குதல் இல்லாத.

74. எது அழகு?

இடைவனப்பும் தோள்வனப்பும் ஈடின்வனப்பும்
நடைவனப்பும் நாணின்வனப்பும்-புடைசால்
கழுத்தின் வனப்பும் வனப்பல்ல எண்ணோடு
எழுத்தின் வனப்பே வனப்பு.

விளக்கவுரை

இடை அழகு அழகல்ல. தோள்களின் அழகும், வலிமை பெருமை தரும் அழகும் நிமிர்ந்த நேர்கொண்ட நடையின் அழகும். வெட்கப்படுவதால் முகத்தைச் சிவக்க வைத்து செழிப்பாக்குமே. அந்த நாணத்தின் அழகும் பக்கங்களில் சதைப் பிடிப்புள்ள கழுத்தின் அழகும் அழ கல்ல. எண்ணும் எழுத்துமாகிய கணக்கும், இலக்கியமும், கற்பதால் பெறும் கல்வி அழகே. அறிவின் அழகே உண்மை அழகாகும். அதுவும் உண்மையால் கல்வியே அழகு என்பதையும் மறக்கக்கூடாது உண்மையான கல்வி என்பது ஒருவரை சொந்தக்காலில் நிற்கச் செய்ய வேண்டும். அச்சத்தை பரிபூரணமாக நீக்கவேண்டும். மரணத்தை வெல்லவேண்டும். அத்தகைய ஞானக்கல்வியே அழகெல்லா வற்றிற்கும் பேரழகாகும்.

அ.பொ.

இடை–இடுப்பு. ஈடு–பெருமை. நாண்–வெட்கம். புடை–பக்கம். எண்–கணிதம் (இலக்கணம் என்றும் கூறுவர்). எழுத்து–இலக்கியம். வனப்பு–அழகு.

75. ஆசிரியருக்கு அழகு

அறுவர் தம்நூல் அறிந்து உணர்வுபற்றி
மறுவரவு மாறான நீக்கி-மறுவரவுஇல்
மாசாரியனா மறுதலைச் சொல்மாற்றுதலே
ஆசாரி யனது அமைவு.

விளக்கவுரை

அறுவகை சமயத்தவரும் தங்கள், தங்கள் நூல்களில் கூறியவற்றைக் கற்க வேண்டும். ஞானம் அடையப் பெற வேண்டும். அந்நூலில் உள்ள மறுதலிக்கக் கூடிய கருத்துக் களையும், மாறுபாடான கருத்துக்களையும் நீக்கி விட்டு குறைகள் ஒன்றுமில்லலாத ஒழுக்கத்தில் உயர்ந்தவனாய்

நன்மைக்கு மாறாக உள்ள மறுத்துரைக்க வேண்டிய வற்றை மறுத்து, அதை மாற்றியமைப்பதே ஒரு நல்லாசி ரியனுக்கு உரித்தான குணமும் குறிக்கோளும் ஆகும். அறுவகை சமயம் என்பது சைவம், வைணவம், சாக்தம், சௌரவம், கணாபத்தியம், கௌமாரம் என்பதாகும்.

அ.பொ.

மறுவரவு-மறுத்தலுக்குரிய. மாறான-மாறுபட்ட. மறுவரவுஇல் - குறை ஒன்றும் இல்லாது. மாசாரியன்-உயர்ந்த ஆசாரம் உடையவன். ஆசாரம்-நல்லொழுக்கம். ஆசாரியன்-ஆசிரியன், குரு. அமைவு-அமைய வேண்டியது. சைவம் முதலான ஆறு சமயங்களும் வைதிக சமயங்கள் என்றும், பவுத்தம், சமணம், பைரவம், காளாமுகம், உலோகாயதம், சூனியவாதம் இவை புறச் சமயங்கள் என்றும் கூறுவர்.

76. எது தவம்?

**ஒல்லுவ நல்ல உருவ வேல்கண்ணினாய்
வல்லுவ நாடி வகையினால்-சொல்லின்
கொடையினால் போகம் சுவர்க்கம் தவத்தால்
அடையாத் தவத்தினால் வீடு.**

விளக்கவுரை

வேல் போன்ற வடிவுடைய அழகிய கண்களை உடையவனே... நல்ல அறிவு நூல்களை ஆராய்ந்து அறிந்ததன் வழிச் செல்வது என்றால் கொடை கொடுப்பதால் இப்பிறவியில் இன்ப வாழ்வு கிட்டும். ஒன்றைக் குறித்துச் செய்யப்படும் தவத்தால் வானுலக சுவர்க்கமும் கிடைக்கும். எதிலும் பற்று வைக்காது, பயன் கருதாது செய்கிற தவத்தால் பேரின்ப வீடு சித்தியாகும். தவம் இரண்டுவகை என்கிறது இப்பாடல்.

ஒன்று பயன் கருதிச் செல்வது. மற்றது பற்றற்றுத் தவத்தைப் பற்றியே பற்றி நிற்பது. பயன் கருதிச் செய்கிற

தவம் வேண்டும் வரத்தைத் தரும். இதை தேவர்களும், அசுரர்களும் செய்தார்கள் என்றாலும் வானுலக தேவர்கள், மானுட அசுரர்களைக் கண்டு அஞ்ச வேண்டியதாயிற்று. மேலான சுவர்க்கமான வைகுண்டத்தில் இருக்கும் திருமாலே இதற்கு விலக்காக வில்லை. எனவே பற்றற்ற தவமே சிறந்தது என்பது உட்பொருளாகும்.

அ.பொ.

ஒல்லுவ-ஒப்பான. வல்லுவ-கற்பதற்கேற்ற அறிவு நூல். வகை-முறைமை. கொடை-பயன் கருதாது கொடுப்பது. போகம்-இன்பம். அடையாத்தவம்-பற்றடையாத. பற்றைவிட்ட தவம். வீடு-பேரின்ப வீடுபேறு.

77. நற்கதிக்கு உதவும் தவம்

நாற்கதியும் துன்பநவைதீர்த்தல் வேண்டுவான்
பாற்கதியின் பாற்பட ஆராய்ந்து-நூற்கதியின்
எல்லை உயர்ந்தார் தவம்முயலின் மூன்றைந்தேழ்
வல்லை வீடாகும் வகு.

விளக்கவுரை

நால்வகைப் பிறப்புக்களின் துன்பநோய்த் தீமையைப் போக்க விரும்புபவன், அந்த நால்வகைப் பிறப்புகளின் தன்மையை உணர்ந்தறிந்து கல்வி நூல் கேள்விகளில் எல்லை கண்ட சான்றோர்கள், மேற்கொள்ளும் மேலான தவத்தைச் செய்ய விரும்பினால் அவன் மூன்று, ஐந்து அல்லது ஏழாவது பிறப்பில் வீட்டின்ப முத்தியை அடைவான் என்பதை உய்த்துணர்க. இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

தவம் செய்யும் போதெல்லாம் நீங்கள் முன்னேறு கிறீர்கள். தவத்தை மறந்து உலகப் பொருட்களில் மூழ்கும் போதெல்லலாம் பின்னடைவை நீங்கள் சந்திக்கிறீர்கள் என்பதை அறிய வேண்டும். தவத்தின் மூலம்தான் உயிர்

களுக்குள்ளே உறையும் இறைக்காட்சியை காணமுடியும். நீங்கள் தெய்வ வடிவம் என்பதை அறியாதவரை முழு அச்சமும் விலகாது. ஆகவே, தூய ஒழுக்கநெறியை கைகொண்டு தவம் செய்யுங்கள். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

நால்கதி–தேவர், நரகர், மனிதர், விலங்கு. நவை–குற்றம். பால்கதி–நான்கு வகைப் பிறப்பின் நிலைமை. பாற்பட–வகை அறிந்து. நூல்கதி–நூலறிவு.

78. ஈகை

தாயிழந்த பிள்ளை தலைஇழந்த பெண்டாட்டி
வாயிழந்த வாழ்வினார் வாணிகம்–போயிழந்தார்
கைத்துஉண்பொருள் இழந்தார் கண்ணில் அவர்க்கு ஈய்ந்தார்
வைத்து வழங்கி வாழ்வார்.

விளக்கவுரை

தாயை இழந்து விட்ட பிள்ளை, வறியவர்க்கு தலைவனை இழந்து விட்ட வழங்குவதே மனையாள், பேசும் சக்தியை இழந்து விட்ட ஊமைகள், வியாபாரம் செய்து முதல் இழந்தவர்கள். உணவு முதலியவற்றிற்கு மூலாதாரமாக இருந்த கைப்பொருள் இழந்தவர்கள். பார்வையற்றவர்கள் இப்படிப்பட்டவர்களுக்கு கொடுத்துதவி, தாமும் உண்டு வாழ்பவர் செல்வ சிறப்புடன் வாழ்வர் என்று ஏலாதி கூறுகிறது.

அ.பொ.

தலை–தலைவன். வாணிகம்–வியாபாரம். கைத்து–கைப்பொருள் செல்வம். வைத்து–வளம் நிறைய.

79. பிறர் துன்பம் போக்குவதே அறம்

சாக்காடு கேடு பகைதுன்பம் இன்பமே
நாக்காடு நாட்டுஅறை போக்குமென-நாக்காட்டா
நட்டார்க்கு இயையில் தமக்குஇயந்த கூறுஉடம்
பட்டார் வாய்ப்பட்டது பண்பு.

விளக்கவுரை

மரணம், இழப்பு, பகைமை, துயரம், மகிழ்ச்சி, நாவினால் விளையும் நாட்டில் உள்ளவர்கள் கூறம் ஏனைச் சொல். இவை எல்லாம் நண்பர்களுக்கு உற்றவையாகுமானால் தமக்கு உண்டானதாக கருதுவதே உயர்ந்த பண்பாகும். நண்பர்களுக்கு ஏற்படும் துன்பங்களை தனக்கே ஏற்பட்ட துன்பமாக நினைத்து அதைப் போக்க முயலுதல் என்பது மிக உயர்ந்த பண்பு என்று ஏலாதி கூறுகிறது.

தன்னிடமிருக்கும் ஆத்ம ஒளியே நண்பர்களிடமும் இருக்கிறது. மற்ற மனிதர்களிடமும்கூட இருக்கிறது. ஆகவே, நண்பர்கள் மட்டுமல்ல. மற்ற எல்லா மனிதர்களின் துன்பங்களையும் நமதாக்கி கொள்வதே மாபெரும் பண்பு என்பதாகும்.

அ.பொ.

சாக்காடு-மரணம். இன்பம்-மகிழ்ச்சி. நாக்குஆடு-நான்கு அடி அசைவதால் பேச்சு பிறக்கிறது. (இதைக் குறித்தது நாக்கு ஆடு என்பது). நாட்டு அறை-நாட்டில் உள்ளவர்கள் கூறும் பழிச் சொல். அறை-சொல்.

80. பேரின்ப வாழ்வு பெறவேண்டுமா?

புலையாளர் புண்பட்டார் கண்கெட்டார் போக்கில்
நிலையாளர் நீர்மை இழந்தார்-தலையாளர்க்கு
ஊண்கொடுத்து ஊற்றுஆய் உதவினார் மன்னராய்க்
காண் கொடுத்து வாழ்வார் கலந்து.

விளக்கவுரை

தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள், உடலில் காயப் பட்டவர்கள் கண்பார்வை இழந்தவர்கள், தாம் போகும் இடங்கள் எங்கும் தங்காது பயணம் செய்கிறவர்கள், நன்கு வாழ்ந்திருந்து தங்கள் மேன்மை இழந்து கீழ்நிலை அடைந்தவர்கள் சிறந்த தலைமைப் பண்புடைய உயர் குணத்தவர்கள் ஆகிய இவர்களுக்கு உணவு கொடுத்து, பக்க துணையாக, பாதுகாப்பாக இருந்து உதவியவர்கள் உறவினருடன் கலந்து மகிழ்ந்து அரச வாழ்வு வாழ்வர் என்பதை அறிக. இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

திக்கற்றவர்களுக்கு உதவுபவன் அரச வாழ்வு பெறுவான் என்று பல பாடல்களில் ஏலாதி கூறுகிறது. மற்றவர்களுக்கு செய்யும் உதவி பல மடங்கு பெருகி நம்மிடமே வந்து சேருகிறது என்பதை பறக்கக் கூடாது.

அ.பொ.

புலையாளர்-கீழ்மக்கள். புண்-காயம். போக்கில்-போகும் இடங்களில். நீர்மை-தன்மை. தலையாளர்-உயர்ந்தோர். ஊண்-உணவு. ஊற்றுஆய்-ஆதரவாய் கொடுத்து கொடுத்து.

ஏலாதி விளக்கவுரை முடிவுற்றது.

❑ ❑ ❑

திருமதி.அம்சவேணி பெரியண்ணன்

"திருக்குறளை மக்களிடம் பரவலாக எடுத்துச் செல்வதில் புதிய முறையைக் கையாண்டவர். திருக்குறளை ஓலைச்சுவடிபோல் பதிப்பித்தும் திருமணப் பரிசாகவும் நண்பர்களுக்கு அன்பளிப்பாக வழங்கும் பழக்கத்தை அறிமுகப்படுத்தியவர். வாழ்க்கைத் துணைநலம் என்ற வள்ளுவர் பெருந்தகையின் கருத்துக்கு இலக்கணமாக வாழ்ந்தவர் திருமதி.அம்சவேணி பெரியண்ணன்."

– சுதந்திரப் போராளி தோழர்.இரா.நல்லகண்ணு

மூத்த தலைவர், தேசியக் குழு உறுப்பினர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

"நூல்களுக்காக வாழ்ந்தவர் இப்போது நூலாகவே வாழ்கிறார்! அந்தக் காலத்தில் பாடப்புத்தகங்களைத் தாண்டி பல்வேறு துறைகள் சார்ந்த புத்தகங்களை அச்சிட்டு, அனைவரையும் படிக்க வைத்தார். ஒரு பெண்மணி என்றால் நம்ப முடிகிறதா? அந்த சாதனையைப் படைத்தவர்தான் அம்சவேணி பெரியண்ணன். சாதனைப் பெண்மணி அம்சவேணி பெரியண்ணன் பல விஷயங்களில் முதல்வர்."

– மருத்துவர் அன்புமணி இராமதாஸ்

தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர்

"பதிப்பகத்துறையில் முதல் பெண்மணி என்னும் மகுடம் தரித்தவர் திருமதி.அம்சவேணி பெரியண்ணன். ஒரு பெண் பதிப்பாளராக 1000 நூல்களை வெளியிட்டுள்ளார் என்பது வியக்கத்தக்க ஒன்றாகும். பதிப்பகத் துறையில் முதல் பெண்மணி என்னும் மகுடம் தரித்தவர் வனிதா பதிப்பகம் திருமதி.அம்சவேணி பெரியண்ணன் அவர்கள். பெண்ணுலகின் அணிகலனாக ஒளிரும் அம்மையாருக்கு நன்றி!"

– கி.வீரமணி

தலைவர், திராவிடர் கழகம்

"நான் எழுதிய மக்களிசைப் பாடல்கள், பழமொழிக் கதைகள், சிறுவர் பாடல்கள் போன்ற பல்வேறு நூல்களை வெளியிட்டு என்னை எழுத்தாளராக உயர்த்தியவர். என் மனைவி அனிதா குப்புசாமி அவர்களுடன் ஏற்பட்ட நெருங்கிய பழக்கத்தில் அவர்கள் செய்கின்ற சமையல்களைப் பார்த்து 'ஏன் நீங்கள் சமையல் நூல்கள் எழுதக் கூடாது' எனக் கேட்டு உயர்தரமிகு சைவ சமையல், டிபன் சமையல், இனிப்பு வகைகள் போன்ற பல்வேறு நூல்களை வெளியிட்டு பெருமைப்படுத்தியவர். பதிப்புத்துறையில் இவர் செய்த சாதனைகள் எண்ணிலடங்கா."

– கலைமாமணி முனைவர் புஷ்பவனம் குப்புசாமி,

கிராமிய இசைக் கலைஞர்.